# கிராம[illegible]வன

1984 ஏப்ரல்-மே

JL
1/31m N27GR
N84 l.4
22346?

Regd. No. M. || ஶ்ரீ || வந்தேமாதரம். Annual Subscription Rs.

# கிராமானுகூலன்.

# GRAMANUKOOLAN.

(ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.)

புத்தகம் 1. | 1924-வருட எப்ரல்-மேமீ ரக்தாக்ஷி வருட சித்திரைமீ | ஸஞ்சிகை 4.

சந்தா விபரம்.

உள்நாட்டுக்கு வருட சந்தா (தபால்கூலி உள்பட) ... ரூ. 2-0-0
வெளிநாடுகளுக்கு ,, ... ரூ. 2-8-0
தனிப்பிரதி ... ரூ. 0-3-0

விஷய சூசிகை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தஞ்சை ஜில்லா மறு பைசல்—(பத்திராதிபர்) | 65 |
| 2. | கங்கன் கேட்டுகேள்— ,, | 66 |
| 3. | சீவிலிபு இலாகாவில் சீர்திருத்தம் ,, | 67 |
| 4. | நீர் பாசன மசோதா— (ஸ்ரீமான் S சத்தியமூர்த்தி ஐயர், (B. A., B. L., F. M. U. M. L. C.) | 68 |
| 5. | சீக்கியர் வரலாறு (ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்) ... | 69 |
| 6. | புராதன நெசவுத்தொழில்— (ஸ்ரீமான் ஆர். துரைசாமி ஐயர்) ... | 71 |
| 7. | கிராம கைத்தொழில்களின் புனருத்தாரணம்— (ஸ்ரீ ரெவரெண்டு வி. எப் ஆண்ட்ரூஸ்) ... | 73 |
| 8. | கிராமசீர்கேடும், உத்தியோகபோகமும் (ஸ்ரீமான் ஜி. எம். இராமஸ்வாமி அய்யர்) ... | 74 |
| 9. | இலங்கைக் கூலிகளின் கஷ்டமும், இந்தியாவின் நஷ்டமும்—(ஸ்ரீமான் வெ. ராகவஐயர்) ... | 75 |
| 10. | கிராமப் பஞ்சாயத்து— (ஸ்ரீமான் வி. பஞ்சாபகேச ஐயர்) ... | 77 |
| 11. | கூட்டுறவாளர்க்கேற்ற சில துறை— (ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராம ஐயர்) ... | 81 |
| 12. | தற்கால நிலைமை ஓர் சம்பாஷணை. (ஸ்ரீமான் இராஜகோபால அய்யங்கார்) ... | 85 |
| 13 | ராணா பிரதாபசிம்மன் அல்லது ராஜபுத்ர தேசபக்தி (ஸ்ரீமான் எஸ். மகாலிங்க சர்மா) ... | 89 |
| 14. | பாங்குகளின் முறையும், அவைகளின் உபயோகமும் —(ஒரு பாங்க் காஷியர்) ... | 91 |
| 15. | விளம்பரங்கள் | 93—96 |


விளம்பர விகிதம்.

பக்கம் 1க்கு (2 காலம்) ஒரு 1-க்கு ரூ. 10 } { காலம் ½க்கு ஒரு 1க்கு ரூ. 2-8-0
பக்கம் ½க்கு (1 காலம்) ,, 5. } { இதுக்கு 1-க்கு ,, அணா 8.

நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கெழுதித் தெரிந்துகொள்ளவும்.

N. ஆபத்ஸகாய ஐயர்—பத்திராதிபர்.

கிராமானுகூலன் ஆபீஸ்,—கும்பகோணம்.

# கிராமானுகூலனைப்பற்றி பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள் :—

**நவசக்தி.**—கிராமவாசிகளுடைய நன்மையைக்கருதி உழைக்கத் தோன்றியிருக்கிறது.........................

**ஸமரஸபோதினி.**—நம்பாரதநாட்டின் முன்னேற்றம் கிராமாந்தர வாஸிகளின் உழைப்பையும் ஊக்கத்தையுமே பொருத்திருக்கிறதென்பது யாவரும் அறிந்த விஷயம். ஆனால் தேசமுன்னேற்ற விஷயத்தில் தற்பொழுது மிகுந்த அசிரத்தையுடனிருப்பதும் கிராமாந்திரவாசிகளே. உண்மை நிலைமையை எடுத்துக்கூறி கிராமாந்திர வாசிகளை தட்டியெழுப்பி ஊக்கத்தையுண்டாக்க பலர் பாடுபட்டுவரும் இக்காலில், அதையே தனது முக்கிய நோக்கமாகக்கொண்டு வெளியான 'கிராமானுகூலன்' பத்திரிகையை நாம் அன்புடன் வரவேற்கிறோம்.

இப்பத்திரிகையின் முதல் இதழ் கிடைக்கப்பெற்றோம். கிராமங்களைப் பற்றிய பல வியாசங்கள் அதில் பொலித்து விளங்குகின்றன.

கிராமங்களில் கதர் உற்பத்தியை உண்டாக்கிக் குடிசைத் தொழிலை நிலைநாட்டி ஏழைக் குடியானவர்களின் கஷ்டத்தைப் போக்கவும், விவசாயமுறைகளின் நுட்பங்களை அவ்வப்பொழுது எடுத்துக் கூறி கிராமங்களை செழிப்புறச் செய்யவும், மேனாட்டு நாகரீக மாயை கிராமங்களையும் சூழ்ந்து கொள்ளாவண்ணம் தடுத்துப் பண்டைகாலப் புராதீன நாகரீகத்தை கிராமங்களில் வளர்க்கவும், கிராமக்கல்வி சுகாதாரம் முதலியனவற்றை விருத்தி செய்யவும், மற்றும் கிராம முன்னேற்றத்திற்கும் அதனால் தேச முன்னேற்றத்திற்குண்டான மார்க்கங்களை எடுத்துக்காட்டவும் இப்பத்திரிகை முன்னணியில் நின்று அஞ்சாநெஞ்சுடன் வேலை செய்யுமென நினைக்கிறோம்.

இப்பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ என். ஆபத்ஸகாயமய்யரவர்கள் முற்கூறியகொள்கைகள்யாவும்ஒருங்கே அமையப்பெற்றவராகையால், அவரால் நடத்தப்படும் 'கிராமனுகூலன்' பத்திரிகையும் அக்கொள்கைகளுக்காக பாடுபடும் என்பதில் தடையில்லை. கிராமங்களிலுள்ள ஒவ்வொருவரும். அதிலும் முக்கியமாய் நம் தஞ்சை ஜில்லாவிலுள்ள கிராமவாசிகள் ஒவ்வொருவரும் இப்பத்திரிகையைப் படித்தால் பலனடையலாமெனத் திட்டமாய்ச் சொல்லுவோம்.

**தாருல் இஸ்லாம்.**—இதன் முதற் சஞ்சிகையில் கிராமசமுதாயத்தார் அறிந்துகொள்ளவேண்டிய பல அவசியமான விஷயங்கள் நிரம்பித் ததும்புகின்றன. கிராம உத்தியோகஸ்தர்களுள் ஒருமுக்கியஸ்தராயிருந்து வந்த ஐயரவர்கள் தேசமுன்னேற்றத்தின் நன்மையைக் கருதித் தம்முடைய செல்வாக்குள்ள உத்தியோகத்தையும் திரஸ்கரித்தவிஷயம் யாம் கூறாமலே எல்லோருக்கும் தெரியும். ஆதலின் இந்த ஆசிரியர் இவ்வேலைக்கு மிகவும் உரியவரென்பது சிறிதும் மிகையாகாது. தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பிக்கும் இஃது அத்தியாவசியமாயிருக்குமென்பதில் ஐயமில்லை.

**நாடார் குலமித்திரன்.**—தனது பெயருக்கேற்ப பொதுவாய் கிராம ஜனங்களின் நன்மையைக்கருதியே மாதம் ஒருதடவையாக புத்தக ரூபத்தில் வெளியிடப்பெறுகிறது. உலகம் க்ஷேமம் பெறக்காரணஸ்தானம் கிராமங்களேயாகையால் கிராமஜனங்களைப் பலவழிகளிலும் முன்னேற்றும் கொள்கையுடன் தோன்றும் இத்தகைய பத்திரிகைகளை யாம் பெரிதும் மகிழ்வுடன் வரவேற்கிறோம். ஆயினும் இவைகளை எப்பாடுபட்டேனும் கிராமங்களிலேதான் அதிகமாய்ப் பரப்புதல்வேண்டும். அப்போதுதான் இதனின் பயன் பிரயோஜனமுடைத்தாகும.

**தெய்வபக்தன்.**—இதில் கிரமவாஸிகளுக்கு வேண்டிய பல நல்லவிஷயங்கள் மாதந்தோறும் வெளிவரும் என்று நம்புகிறோம். பல அனுபவசாலிகள்விஷயதானம்புரிவார்கள் எனப்படுகிறது. ஆசிரியர் பொதுநலவூக்கமுள்ளவர் என்பதும் அறியலாவது நமது பார்வைக்குவந்த முதல் இதழிலும் பல நல்ல செய்திகள் வெளிவந்துள்ளன பெயருக்கேற்ப இனிதுநடைபெற்று வளர்வதாக.

**பணம்.**—கிராமவிஷயங்களைப்பற்றியும் விவசாயத்தைப்பற்றியும் விவரிக்கு 'விவசாயதீபிகை'' 'கிருஷிகன்'' முதலிய பத்திரிகைகள் முன்பு வெகுதிறமையாக நடத்தப்பட்டு வந்தன. இலங்கையில் ''கமத்தொழில் விளக்கம்'' வெகு நேர்த்தியான பத்திரிகை. இப்போது ''கிராமனுகூலனையும்'' பிரீதியுடன் வரவேற்கின்றோம். இது மாதாந்த ஸஞ்சிகையாக வெளிவருவதாகும். பல அரியவியாசங்கள் இதன்கண் காணப்படுகின்றன. கிராமானுகூலன் உண்மையாக அனுகூலாயகமாக விளங்குமென்று எதிர்பார்க்கிறோம்.

**தேசசேவகன்.**—கிராம சிப்பந்திகளின் நலத்தினைக்காக்க வெளியிடப்பட்டிருக்கிறது கிராம உத்தியோகஸ்தர்களின் நன்மைக்கெனவே இது உலவிவர நோக்கங்கொண்டுளதால், கிராம உத்தியோகஸ்தர்கள் இதனைப்பெரிதும் போற்றுவரென்று எண்ணுகிறோம். பத்திரிக்கையின் சந்தாவும் மிகவும் குறைவே.

---

## நேயர்களுக்கு.

நிரூப சம்மந்தமான கடிதங்களை மாத்திரம் பத்திராதிபருக்கும், பணம் நிர்வாகம் சம்மந்தமான விஷயங்களைப்பற்றியவைகளை புரொப்ரைட்டருக்கும் அனுப்பிவரவேணுமாய் கோருகிறோம்.

புரொப்ரைட்டர், கிராமானுகூலன்.

---

நமது கிராமானுகூலன் பத்திரிகைக்கு[illegible]தாதார்கள் சேர்த்துக்கொடுப்பதற்கும், வி[illegible]ரங்கள் சேகரித்துக்கொடுப்பதற்கும் எல்லாவிடங்களிலும் ஏஜண்டுகள் தேவை. கமிஷன் விவரத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

**மானேஜர், கிராமானுகூலன் ஆபீஸ்**
**கும்பகோணம்.**

223462
600 008

வந்தேமாதரம்.

# கிராமாநுகூலன்.

[ ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. ]

"ஒன்று பட்டாலுண்டே வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்நமக்கேதுவேண்டும்"—பாரதி.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.—ஔவை.

புத்தகம் 1. | ரக்தாக்ஷி-ஸ்ரீ சித்திரை-மீ. | ஸஞ்சிகை 4

## * தஞ்சை ஜில்லா மறுபைசல். *

தஞ்சை ஜில்லாவில் மறுபைசல் செய்தவகையில் அதிகப்படுத்தப்பட்ட வரியைததாங்கமுடியாதென்றும் நிலைமைக்கு மாறாக விதிக்கப்பட்டிருக்கிறதென்றும். அதிக வரியைத்தள்ளிவிடவேண்டுமென்றும், இல்லாதவரையில் தங்களால் அதிகப்படுத்தப்பட்ட வரியைச் சாதாரணமாய்ச் செலுத்தமுடியாதென்றும் மிராசுதார்கள் செய்துவரும் கிளர்ச்சியானது சாத்வீகமாகவும், உண்மையாகவும் நடந்துவரும் கிளர்ச்சியாகவே யிருக்கிறது. மிர்ராசுதார்கள் சங்கத்தினால் சரியானபடி பிரசாரம் செய்யமுடியாம லிருக்கும் ஸ்திதியிலேயே ஜில்லாவின் கிஸ்தி மொத்தத்தில் அதிகப்படுத்தப்பட்ட தீர்வை அப்படியே பாக்கியாகவே யிருக்கிறதென்று சொல்வதைக் காண ஆச்சரியமாகவே யிருக்கிறது. இதனாலேயே தீர்வை தாங்கமுடியாதது தான் என்பது பிரத்தியக்ஷமாகிறது. சங்கத்தின் பிரசாரம் குறைவாயிருந்ததை சில அதிகாரிகள் எடுத்துக்கொண்ட அநிக்கிரம நடவடிக்கைகள் வலுவடையச் செய்துவிட்டன. சட்டத்தையும் அதன்படி நடத்தவேண்டிய முறைகளையும் ஒழுங்காய் நடத்த அவர்களால் முடியவில்லை. முன்னுக்குப்பின் விரோதமாய் நடக்க ஆரம்பிக்கிறார்கள். நோட்டீஸ்களில் மரியாதையாக இதுவரையில் எழுதிவந்ததை 'நீ' என்றும் 'உனக்கு' என்றும் 'உன்னை' என்றும் 'உன்னுடைய' என்றும், ஏக வசனமாய் எழுதி வருவதினால் மிராசுதார்கள் பயந்துகொண்டு விடுவார்களா? இவைகளினால் அதிருப்திதான் மேலோங்கும். யுத்தக் கடன் வேண்டியிருந்த காலத்தில் மிராசுதார்களை எவ்வளவு மரியாதையான பதங்களை உபயோகித்து கடிதங்கள் எழுதி வந்தார்களென்பதை பழைய ரிகார்டுகளைப் புரட்டிப் பார்த்துத் தெரிந்துகொள்ளட்டும். இது ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பதற்கு ஒப்பாகவே யிருக்கிறது நோட்டீஸ்களில் மரியாதைக் குறைவாய் எழுதுவதினால் மிராசுதார்களுக்கு இயற்கையா யமைந்துள்ள மதிப்பு, மரியாதை குறைந்துபோய்விடுமா? ஒரு காலும் குறையாது அதிகாரிகளுக்கு உத்தியோகம் போய்விட்டால் அத்துடன் அவர்கள் மதிப்பும் போய்விடும். மிராசுதார்களுக்கு எப்பொழுதும் மதிப்புக்குறையாது. இதையறியாது சில அதிகாரிகள்

JL
Y31mN2

அன்னிக்குகிக்கிறார்கள். வாயுவேகம் மனோவேகமாய் பறக்கிறார்கள். உண்மையில் அவர்களால் கவர்ன்மெண்டிற்குச் சாதகமுண்டா? அவர்கள் கவர்ன்மெண்டிற்கு துரோகம் செய்பவர்களே யாவார்கள். உண்மை நிலையை எடுத்துச் சொல்லவேண்டியது தான் அவர்கள் கடமையாகும். அவர்கள் ஊழியர்கள் என்பதை மறந்து விடுகிறார்கள். ஜனங்களுக்கு எஜமானர்கள் என்று மனதில் எண்ணிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் நடத்தும் அக்கிரமமான அதிகார தோரணையால் யாதொரு கலவரமும் உண்டாகா திருப்பதற்குக் காரணம் மகாத்மாஜியின் உபதேசத்தினால் அஹிம்ஸா தர்மக் கொள்கை, தேசத்தில் வேரூன்றி விட்டதேயாகும். அவர்கள் தங்களுடைய சுயநலத்தைக் கருதி மேலானபதவியை அடையஆவல்கொண்டுண்மைக்குமாறாக நடக்கிறார்களென்றே கொள்ளவேண்டியதாயிருக்கிறது இவ்விஷயங்களை கவர்ன்மெண்டார் உணராமலிருக்க முடியுமா? தஞ்சாவூர மகாராஜாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி சாசுவத பைசல் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்றும் அடிக்கடி வரியை உயர்த்துவது உடன்படிக்கையை மதித்ததாக மாட்டாதென்றும் ஏற்படுகிறது. நமது காருண்ய கவர்ன்மெண்டார் உடன்படிக்கையை வெற்றக்கடுதாசி யென்று ஒருபொழுதும் மதிக்கமாட்டார்களென்று நம்புகிறோம். கவர்ன்மெண்டார் 6¼% விதம் அதிகப்படுத்திய தீர்வையில் குறைந்து 18¾% விதம் விதித்து விடுவதாக உத்தேசம் கொண்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. அதை மிராசுதார்கள் ஒப்புக்கொள்வார்களென்று நமக்குத் தோன்றவில்லை. இப்படிச் செய்வதால் 18¾% விதமே ஏற்கனவே விதிக்கப்பட்டிருக்கும் மிராசுதார்களுக்கு என்ன சாதகம். கவர்ன்மெண்டார் தங்கள் பிடிவாதத்தை விட்டு உண்மையை தீர விசாரித்து அதிக தீர்வையை பூராவும் ரத்து செய்துவிடுவார்களென்று நம்புகிறோம். அப்படிச் செய்யாதவரையில் மிராசுதார்களிடம் அதிருப்தி வேரூன்றி விடுமென்பது நிச்சயம். கவர்ன்மெண்டாரின் சக்தியை எல்லோரும் நன்கறிந்திருக்கிறார்கள். அவர்கள் வசூலித்துத்தான் விடுவது என்று தீர்மானித்தால் கடுமையான முறைகளைக் கொண்டு வசூலித்துவிட முடியலாம். ஆனால் சாதாரண முறையில் திருப்தியுடன் செலுத்தி வந்தவர்களை கடுமையான அடக்கு முறைகளைக்கொண்டு இம்சைப்படுத்தி வசூல் செய்வதினால் ஏற்படும் செலவையும் தொந்தரவையும் கவர்ன்மெண்டார் உணராமலிருப்பார்களா? அப்படி செய்துவிடுவதினால் என்றும் அதிருப்தி நிலைபெற்று விடாதா? ஜனங்களைத் திருப்தியுடன் ஆளுவதன்றோ கவர்ன்மெண்டின் கடமை. கவர்ன்மெண்டார் புனராலோசனை செய்து அதிகத் தீர்வையைரத்து செய்துவிட வேண்டியது அவசியமென்று வற்புறுத்துகிறோம்.

## சுங்கன் கேட்டுகள்.

——:(o):——

சுங்கன் கேட்டுகள் விஷயமாய்ச்சென்ற மாத சஞ்சிகையில், நாம் எழுதியிருந்ததை அனுசரித்து சேங்காலிபுரம் ஸ்ரீமான் வி. பஞ்சாபகேச அய்யரால் சுங்கன்கேட்டைச் சுற்றியிருக்கும் 3 மைலுக்குட்பட்ட கிராமங்களிலுள்ள மிராசுதார்களின் வண்டிகளுக்கு இலவச லைசென்ஸ் கொடுத்துவிடவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவருவதாக ஜில்லா போர்டு பிரசிடெண்டுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அதன் பேரில் பிரசிடெண்டு மிஸ்டர் A. T. பன்னீர் செல்வம் நாளது 1924—25வருஷத்திற்கு குத்தகைவிடப்பட்டுவிட்டதென்றும், அதில் சில நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டுவிட்டனவென்றும், அ[illegible] இப்பொழுது மாற்றுவதனால் பண விஷயமா[illegible] விவகாரம் ஏற்பட இடமுண்டாகுமென்[illegible] தசமயத்தில் தீர்மானத்தை நிறைவேற்[illegible] வுகரியமான நிலைமை ஏற்படுமாகையா[illegible] தீர்மானத்தை நான் அனுமதிக்கக் கூடாமலிருக்கிறதென்று நிராகரித்து (disallow) விட்டார். தீர்மானத்தைக்கொண்டுவர அனுமதிக்காததற்குமேற்கண்ட காரணங்கள் சரியென்று நாம் ஒப்புக்கொள்ளக்கூடவில்லை நீடாமங்கலம் கேட்டு விஷயமாய் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடனே பிரசிடெண்டு தாமாகவே மற்ற கேட்டுகள் விஷயமாயும் போர்டின் அனுமதியைக் கேட்டிருக்க வேண்டியது நியாயமாகும். ஒரு ஊரில் இரண்டு பைத்தியக்காரர்கள் என்ற கதையாக ஒரு ஜில்லாவில் நீடாமங்கலத்தைச் சுற்றியுள்ள மிராசுதார்கள் மாத்திரம் சவுகரியத்தை யடைவதும் மற்றவர்கள் கஷ்டப்படுவதும் நியாயமாகுமா? தீர்மானத்தை பிரசிடெண்டு அனுமதித்துவிட்டு போர்டில் அதிலுள்ள கஷ்டங்களை எடுத்துச் சொல்லி அதற்குத்தக்க பரிகாரங்கள் ஏற்படுத்திக்கொண்டு தீர்மானத்தை அங்கீகரிக்க வேண்டியதுதான் நியாயமாகும். ரோட் செஸ் என்று ஏராளமான வரியைச் செலுத்தி வரும் மிராசுதார்களை அக்கிரமமாய்க் கஷ்டப்படுத்துவது மிராசுதார்களின் பிரதிநிதிகளடங்கிய ஜில்லா போர்டுக்கழகல்ல. பிரசிடெண்டு சொல்லியிருக்கும் காரணங்களினாலேயே தீர்மானத்தை அங்கீகரிக்க வேண்டியது நியாயமும் அவசியமுமாகுமென்று ஏற்படுகிறது.

போர்டாரே 3 மைல்களுக்குள்பட்ட கிராமங்களின் மிராசுதார்கள் சுங்கன் செலுத்துவது அக்கிரமமாகுமென்று ஒப்புக்கொண்ட கொள்கையை குத்தகை விடப்பட்டுவிட்டதென்று சொல்லும் காரணத்திற்காக அலக்ஷியம் செய்வது தர்மமாகுமா? இன்னம் ஒரு வருஷகாலத்திற்குக் கஷ்டப்படவேண்டியது தானோ! பிரசிடெண்டு புனராலோசனை செய்து தீர்மானத்தை மறுபடியும் கொண்டுவர அனுமதி கொடுத்து நிறைவேற்றி வைப்பதுடன் குத்தகைதார்களுக்கும் நியாயமான பரிகாரங்களைச் செய்துகொடுத்துவிடுவாரென்று நம்புகிறோம்.



## ரிவினியு இலாகாவில் சீர்திருத்தம்.

சென்னைமாகாணத்தின் செலவினங்களைக் குறைக்கும் விஷயத்தைப் பரிசீலனை செய்த சிக்கனக் கமிட்டியார், ரிவினியூ இலாகாவில் செலவைக் குறைக்க இடமிருக்கிறதென்றும், அடிக்கடி ஏற்றத்தாழ்ச்சி ஏற்படக்கூடிய சொற்ப வருமானத்தை வசூல் செய்வதற்காக வைத்திருக்கும் அதிக உத்தியோகஸ்தர்களை எடுத்துவிடலாமென்றும், பசலி ஜாஸ்தி தீர்வை விதிப்பதற்கு பதிலாக ஸன்செய் நிலத்தின் தீர்வையை ஒரு வழியாக சேர்த்துப் போட்டுவிடலாமென்றும், புறம்போக்கு நிலங்களை ஸ்தல ஸ்தாபனங்களிடம் ஒப்புவித்துவிடலாமென்றும், காலஸ்திதியை உத்தேசித்து வஜா செய்வதற்கு பதிலாக தாராளமாக அலவுன்ஸ்கள் கொடுத்துவிடலாமென்றும், கிராம தாலூகா கணக்குகளைக் குறைத்துவிடலாமென்றும், பட்டா மாறுதல்களைக் கட்டாயமாய்ப் பதிவு செய்யும்படி செய்துவிடலாமென்றும், ஜமாபந்தியை நிறுத்திவிடலாமென்றும் அநேகம் சிபார்சு செய்திருந்தனர். கமிட்டியார் பல சிக்கலான விஷயங்களைச் சிபார்சு செய்திருந்ததை முன்னிட்டு இவைகளைப் பரிசீலனை செய்வதற்காக ஸ்ரீமான் திவான் பகதூர் ஆர். ராமச்சந்திர ராவை ஸ்பெஷல் உத்தியோகஸ்தராக கவர்ன்மெண்டார் நியமித்திருக்கின்றனர். நிலத்தீர்வை விதித்து வசூலிக்கும் முறையை சுலபமானதாகச் செய்து உத்தியோகஸ்தர்களைக் குறைக்கமுடியாதா வென்பதை அவர் பரிசீலனை செய்வார். தண்ணீர்த் தீர்வை, இரண்டாம்போக சாகுபடி முதலிய விஷயங்களைக் கண்டுபிடிக்க இப்பொழுது அதிக சிரமமேற்பட்டு வருகிறது. ஜில்லா உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுத்திருக்கும் வேலை முறைகளையே அடியுடன் மாற்றுதவரையில் இதற்கு சாத்தியமில்லையென்று கருதப்படுகிறது. வட்டங்களை இணைத்த விஷயத்தைப் பற்றியும் இவர் பரிசீலனைசெய்வார். கவர்ன்மெண்டார் விசேஷ மாறுதல்களைச் செய்ய இணங்குவதாக இருந்தாலன்றி இந்த விசாரணையினால் பிரயோசனமேற்படாதென்ற அனுபவம் வாய்ந்த கலெக்டர்கள் சொல்லுகிறார்கள். ஸ்ரீமான் ராவ் 6 மாதகாலம் இந்த வேலையில் ஈடுபட்டிருப்பார். அவசியமானால் ஜில்லா கலெக்டர் ஆபீசுகளுக்குப்போய் பார்வையிடுவதுடன் உத்தியோகஸ்தர்களையும், உத்தியோகஸ்தரல்லாதவர்களையும் கலந்து பேசுவார்.

# நீர் பாசன மசோதா.

(ஸ்ரீமான் எஸ். ஸத்தியமூர்த்தி ஐயர், பி. ஏ., பி. எல்., எப். எம். யூ., எம். எல். ஸி.,)

தற்போது சட்டசபையில் ஆலோசனைக்கு வந்திருக்கும் நீர்பாசன மசோதாவை ஒருவரும் ஆதரிக்கக் கூடாது. ஸர். கே. ஸ்ரீனிவாசய்யங்கார் கொண்டு வந்த மசோதாவை விட இம்மசோதா சிலாக்கியமானதுமன்று. ரயத்துகளின் நன்மை ஒருபுறமிருக்க ஜமீன்தார்களுக்காவது அனுகூலமுண்டாவென்றால் அதுவுமில்லையென்றே காணப்படுகிறது. விவசாயிகளுக்காக ஸ்ரீமான் எம். ராமச்சந்திர ராவ் ஒருவர் தான் இந்த மசோதாவைத் தயாரித்த கமிட்டியில் வாதாடக் கூடியவராக இருந்தார். அவர் செய்துள்ள சிபார்சுகளோ அல்லது மாறுதல்களோ இந்த மசோதாவில் சேர்க்கப்படவில்லை யென்றே ஏற்படுகிறது.

தனிக்கமிட்டியின் அமைப்பும் வெறும் வேஷமாகவே காணப்படுகிறது. கமிட்டியில் ஸ்தானம் வகிக்க வேண்டுமென்று விரும்பியவர்களுக்கு ஸ்தானம் கிடைத்திருக்கிறது. எனக்குத் தெரிந்தவரை ஒருவர் தான் மசோதாவுக்கு விரோதமாகப் பேசக்கூடியவர். கமிட்டியினால் ஒருவித பிரயோஜனமும் இருக்காதென்றே நான் தைரியமாகக் கூறுவேன். அங்கத்தினர்களின் முதலாவது கூட்டத்திலேயே இந்த விஷயம் தெரிந்துவிட்டது முதலாவது கூட்டத்தின் முடிவில் அவர்கள் என்ன செய்துவிட்டனர், மேற்கொண்டு மீண்டும் கூட்டத்தை நடத்தவே கமிட்டியார் தீர்மானித்தனர். உதகமண்டலத்தில் எதற்காகக் கமிட்டி கூடவேண்டுமென்று தெரியவில்லை. ரயத்துகள் அங்கு சென்று சாட்சியம் கொடுப்பதும் கஷ்டம். இந்த மசோதாவினால் ஏதாவது விவசாயிகளுக்கு நன்மை உண்டா என்று நான் கேட்கிறேன். இந்த மசோதாவை அங்கீகரிப்பதைவிட இன்னும் வேறு நல்ல மசோதா கிடைக்கும்வரையில் காத்திருப்பதே உத்தமம்.

இன்னொரு விஷயம் முக்கியமானது இம்மசோதா வரி விதிக்கும் தன்மையதாகவுமிருந்து வருகிறது. எவ்வளவு வரி விகிதமும் கொடுக்கும்படி நிலச்சுவான்தாரை நிர்ப்பந்தப்படுத்த கவர்ன்மெண்டுக்கு இந்த மசோதாவினால் அதிகாரமேற்படுகிறது. இது கூட்டுக் கமிட்டியின் சிபார்சுகளுக்கு நேர் விரோதமாக இருக்கிறது. நிர்வாக அதிகாரிகள் ஜனங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரத்தைப் பெறக் கூடாதென்று கூட்டுக் கமிட்டியார் சொல்லியிருக்கின்றனர்.

கோர்ட்டாருக்குள்ள அதிகாரத்தையே எடுத்துவிடக் கூடிய பிரிவுகள் மசோதாவில் இருந்து வருகின்றன. மசோதா நிர்வாக அதிகாரிகளுக்கே ஆதரவளிக்கக்கூடியதாயிவிடும். தங்கள் குறைகளை நிவர்த்தித்துக்கொள்ள விவசாயிகளுக்குள்ள உரிமையையும் இந்த சட்டம் பறித்துவிடுகின்றன.

'கவர்ன்மெண்டின் நிலம்' என்று மசோதாவில் கண்டிருப்பது நிலச்சுவான்தார்களுக்கு விரோதமானது. மேலும், நிலத்திலிருந்து வரும் வருமானம் வாடகையா அல்லது வரியா என்று ஒருவித முடிவுக்கு வரவில்லை. ஜனங்கள் அல்லது கவர்ன்மெண்டார் நிலத்திற்குச் சொந்தமானவர்கள் என்று ஒருவித முடிவு ஏற்படவில்லை. மேலும் மசோதாவின் 20-வது பிரிவின்கீழ் நீர்ப்பாசனக் கால்வாய்களுக்கோ அல்லது குளங்களுக்கோ ஏதாவது நஷ்டமேற்பட்டால் எந்த நிலக்காரர் நஷ்டமுண்டுபண்ணினாரோ அவருக்கு மாத்திரம் தண்டனை விதிக்காமல் அந்தஜலாதாரத்தின் நீர்ப்பாசனத்தைப்பெறும் எல்லா நிலக்காரர்களுக்கும் சேர்த்தாற்போல் தண்டனை விதிக்க மசோதாவின் விதிகளில் இடம் கொடுத்திருப்பதும் ஆக்ஷேபகரமானது.

இன்னொரு பிரிவில் கட்டாயப்படுத்தி வேலை வாங்க கவர்ன்மெண்டுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது பண்டைக் காலத்தில்தான் கட்டாயக் கூலிமுறை இருந்து வந்தது வெளிநாடு செல்ல அநுகூலமில்லாத நாட்களில் இம்முறை யிருந்து வந்தது. இக்காலத்தில் ரெயில்வே கப்பல் வசதிகள் இருப்பதால் கட்டாயக் கூலிமுறை என்பது காலங் கடந்ததாகும். முக்கியமான நீர்ப்பாசன திட்டத்தின் உத்தேசம் விவசாயிகளுக்கு ஜல வசதிகள் செய்யக்கூடியதாகவே யிருக்கவேண்டும். தற்போதுள்ள மசோதாவின் கீழ் அத்தகைய ஜல சப்ளை செய்வதற்கு கவர்ன்மெண்டார் கட்டுப்பட்டவர்களாக மாட்டார்கள்.

இத்தகைய ஆக்ஷேபனைகள் இருப்பதால் மசோதாவின் முக்கியமான நோக்கங்கள் மாறும் வரையில் அதை ஆக்ஷேபித்து நிராகரித்துவிட வேண்டுமென்றே நான் சொல்வேன்.

---

சென்னை சட்டசபை அங்கத்தினரும் ஆண்டிப்பட்டி ஜமீன்தாருமான ஸ்ரீமான் மு. சி. த. பெத்தாச்சி செட்டியார் காலமாகிவிட்டதைக்கேட்க மிகவும் வருந்துகிறோம். அன்னார் தமிழுலகத்திற்கு இன்றியமையாதவர். தமிழ்ப் பத்திரிகைகளுக்குப்பெருதவி புரிந்தவர். பரோபகார சிந்தையுள்ளவர். அநேக பாடசாலை, கும்பகோணம் ஸ்ரீ காமகோடி பீடம் ஸ்ரீ ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் மடத்தைப் புதுப்பிக்க மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டிருந்தார். தர்ம சிந்தையுள்ள அவருடைய மரணத்தால் தமிழ்நாடு ஒரு முக்கியமானவரை இழந்துவிட்டது. அவருடைய சகோதரர் முத்தைய செட்டியாருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் நம்முடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். (—ர்.)

# சீக்கியர் வரலாறு.

## அவர் தம் மதத்தின் பரமபாடம்.

(ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணிய ஐயர், சென்னை.)

பாரத நாட்டின் பற்பல வகுப்பினரில் மூவரை முதன்மையாகச் சொல்ல வேண்டும். அம்மூவரும் ராஜபுத்திரர், மகாராஷ்டிரர், சீக்கியர் ஆவர். ஏழாவது நூற்றாண்டின் இறுதிவரையில் இத்தேசத்திலே இந்தியரின் ஆட்சிதான் ஓங்கி உயர்ந்து நின்றது. அப்பால் இஸ்லாமியர் அல்லது முகம்மதியர் என்போர் இங்கே தோன்றினர்; தோன்றிய துவக்கத்திலே, நாடு பிடிக்கும் ஆசை அவர்களிடம் அவ்வளவாக இருக்கவில்லை; பின்னர் சில நூற்றாண்டுகள் கழிந்ததும், நாடுகொண்டு அரசாளும் ஆசை அவர்களிடம் உதித்தோங்கலாயிற்று. அதுகாரணமாக, ஹிந்துக்களுக்கும், இஸ்லாமியருக்கும் இடையே கிளம்பிய மனக்கசப்பு, சண்டை சச்சரவுமுதலியவற்றிற்கு ஓர் அளவில்லையெனலாம். அம்மனக்கசப்பும், சண்டைசச்சரவும் ராஜீகத்தைமட்டும் ஆதாரமாகக் கொண்டிருக்கவில்லை; மதப்பற்றையும், சுயமதிப்பையும் ஆதாரமாகக் கொண்டிருந்தன. அச்சமயத்திலே பாரத புத்திரர்களில் தமது சுயமதிப்பு, மதப்பற்று, ராஜீகம் முதலியவற்றைக் கடைப்பிடித்து நின்று, கடைசிவரையில் கடும்போர் புரிந்துவந்தோர் அம்மூவருமேயாவர். அம்மூவருடைய சரிதங்களைப் படிப்பின தேசபக்தி, வீரத்தன்மை, மதாபிமானம்முதலியன ஊற்றெடுத்துப் பெருகும். ஆதலினாற்றான், பாரதபுத்திரரிலே ராஜபுத்திரர், மகாராஷ்டிரர், சீக்கியர் ஆகிய மூவரையும் முதன்மையாகச் சொல்லலானேன். இக்காலத்தே சுதந்திரத்துக்காகப் பாடுபடும் ஒவ்வோர் இந்தியரும் அம்மூவர்தம் சரிதங்களை முற்றிலும் படித்தறியின், மிக்க பலனெய்தலாம். இது நிற்க,

இப்போது, ஹிந்து-முகம்மதிய ஒற்றுமை மிகவும் அவசியமென எல்லோரும் கருதுகின்றனர். அந்த ஒற்றுமை எதற்காக? கேவலம் சுயராஜ்யசித்தி எய்துவதற்கா? சுயராஜ்ய சித்திக்காயின், அந்த ஒற்றுமை நீடித்திராது. மேலும், சுயராஜ்யம் பெற்றபின், இருவரும் வேற்றுமைகொண்டு விடாப்போர்புரிய நேருமென்பது திண்ணம். ஆதலின், சுயராஜ்ய சித்திக்காக மட்டுமேல்லாமல், மிகவுமுயர்ந்த சுதந்திரமடைவதற்கும், மனிதவாழ்வின் மேலானபலனைப் பெறுவதற்குமாக, அந்த ஒற்றுமை ஏற்படின், அது என்றும் உறுதியுடன் நிற்கமுடியும். ஹிந்துக்களிலும் சரி, முகம்மதியரிலும் சரி மேலேகண்டவாறு விரும்புவோர் எத்தனை பெயருளர்? ஒவ்வொரு முகம்மதியனும், ஹிந்துவும் தனது நெஞ்சம் சாட்சியாக சிந்தித்துப் பார்த்துக்கொள்ளட்டும்.

பதினைந்தாவது நூற்றாண்டிலே ஹிந்துக்களும் முகம்மதியரும் மனம் வேறுபட்டு, மகா வைரிகளாகக் கிடந்தனர். எங்ஙனமெனில், இதனைச்சிறிது விளக்குவுரைப்போம். அக்காலத்திலே பாரததேசம் மொகலாயவரசின் ஆட்சிக்கு உட்படலாயிற்று. மொகலாயரை மிலேச்சர் என ஹிந்துக்கள் மதித்துவந்தனர். மொகலாயரோ ஹிந்துவை காபிர் எனக்கருதிவந்தனர். இருவகையினரும் மதம், மதம் என்றுசொல்லி மதமேகொண்டு மாறுபட்டு நின்றனர். ஒரு மகான் கூறியவண்ணம், வேந்தர்கள் என்போர் மனிதரை வெட்டிக் குவிப்போராக இருந்தார்கள்; கொடுமையே அவர்களுடைய ஆயுதமாக வழங்கிவந்தது; பகுத்தறிவுள்ள மனிதர் கடமையென்பது காற்றில் பறந்துபோய்விட்டது; பொய்யே நிரம்பிக்கிடந்தது; சுருங்கச்சொல்லின், மாயையின் வசப்பட்டு மானிடர் மாழ்கிக்கிடந்தனர்; சத்தியம் என்னும் சந்திரன் தோன்றாது மறைந்துபோனான்; ஞானமென்னும் மேலான படியிலேறி நின்ற மகான்களுக்கு அக்காலமனிதவாழ்வு அங்ஙனமே தென்பட்டது ஆச்சரியமாகாது.

அத்தகைய சீர்கேடான காலத்திலே ஒரு பெரியவர் பாஞ்சாலநாட்டில் அவதரித்தார். அவரைப்பற்றிச் சொல்லுமுன், அவர் பிறந்தநாட்டின் நலத்தை நவில வேண்டும். அப்பாஞ்சால நாட்டில்தான், ஆதியிலே வேதஞானம் கிளம்பிற்று; உபநிஷத்து வாக்கியங்களும் உதித்தன. (சிலர் சொல்லும்வண்ணம், ஆதிபராசக்தியின் ஓர் அம்சமான) பாஞ்சாலியும் பிறந்துவளர்ந்தாள்; பௌத்த மதபோதனைகளும், கலாசாலைகளும் நிறம்பியிருந்தன; பஞ்சநதி பாயும் அப்பிரதேசத்தில்தான், பாரம்பரையாகப் போர்வீரரான சீக்கியரின் பரம ஆத்மசக்தியும் இப்போது கிளம்பி, இந்தியாவெங்கும் ஒரு பிரமையை உண்டு பண்ணியுளது; இவ்வளவு சீரும் சிறப்பும்வாய்ந்த நாட்டில் நலம் விளைக்கவந்த மகான் பெயர் நானக்.

ஹிந்துக்களும், முகம்மதியரும் மாறுபட்டுக் கிடப்பதைக்கண்டு அப்பெரியவர் மனம் சகிக்கவில்லை. ஆதலின் இருவரையும் ஒருமைப்படுத்த முயன்றார். அப்

போது பலரும் அவரை "இவன் ஒரு பித்தன்" என்று ஏசிப்பேசினர்; என்றாலும் அவர் தமது முயற்சியை விட்டுவிடவில்லை. ஹிந்துக்களும் சரி, முகம்மதியரும் சரி ஒருவொருக்கொருவர் அன்புகாட்ட வேண்டுமென்றார்; சமாதானபுத்தி கொள்ளவேண்டுமென்றார்; சகோதரப்பான்மை பூணவேண்டுமென்றார்; ஆண்டவன் ஒருவனேயென்றார்; அவருக்கு முன்னிலையில் ஜாதி, மதபேதம் இல்லாதிருக்கையில் மனிதருக்குள்ளே ஜாதி, மதபேதம் கூடாதென்றார்; இவ்விதம் அவர்போதித்து இத்தேசத்திலே மிகவும் உயர்வான ஒரு மதத்தையும். ஜாதியையும் உண்டுபண்ணலானார்.

அத்தகைய போதனையைக்கேட்டு ஆதியிலே அவரது அன்னையும், பிதாவுமே அவரை அசட்டை செய்யலாயினர்; எனவே, அரசரும், பிறரும் அப்பெரியவரை அசட்டைசெய்தது வியப்பாகுமோ? பிறர்கூறும் வாழ்த்தையும், இகழ்வையும் அவர் ஒருபொருட்டாக மதிக்கவில்லை. தமது கருமத்திலே ஆயுளளவும் கண்ணாயிருந்தார். அவர் இவ்வுலகிலே 1469-ம் வருஷம் தோன்றி 1538-ம் வருஷத்தில் ஆண்டவனது பாதம் சேர்ந்தார்.

தமதுவாழ்நாளிலே அவர் ஆசியாவெங்கும் சுற்றித்திரிந்து தமது புதிய மதத்தைப் பரப்பிவந்தாரென அறிகிறோம். வங்காளம், பர்மா, தக்ஷிணம், அரேபியா, பாக்தாத், ஸயாம், காபூல், ருஷியா முதலிய நாடுகளும், தேசங்களும் அவரது பாதம்பட பாக்கியம் படைத்தன. அவரது வாக்கியத்தொடர்களில் ஒன்றை இங்கே குறிப்பிடுவோம்:—

"எந்தஜாதத்தைச் சேர்ந்தோராயினும், ஞானிகளிடம் அன்புகாட்டு; அகம்பாவம் என்பதை அகற்றிவிடு; மதத்தின் சாரமென்ன? ஜீவராசிகளிடம் அன்பும், ஆர்வமும் காட்டுவதேயாம்; அழகிய ஆடை தரிப்பதன்று; காஷாயம் தரித்து, விபூதி பூசுவதன்று; சங்கராதஞ் செய்வதன்று; தலையை மழுங்கச் சிரைத்துக்கொள்வதன்று; பிரமாதமாகப் பாடித்துதிப்பதன்று; துறவிபோல் திரிவதன்று; மாயைசூழ்ந்த இவ்வுலகிலே கல்லெண்ணமும், நற்சிந்தையும், புத்திபரிபக்குவமும் கொள்வதேயாகும்."

இவ்வளவு மேலான போதனைகளைக் கேட்டபின் துருக்கிஸ்தானம் முதலிய தேசங்களிலும் அவருக்கு, சீடர்கள் ஏற்பட்டனர். ஒருசமயம் அவர் 'மக்கா' சென்றிருந்தார். அப்பொழுது, "நீர் முகம்மதியரா, ஹிந்துவா?" என்று சிலர் கேட்டனர். அதற்கு அவர் "நான் ஹிந்துவுமல்லன், முகம்மதியனுமல்லன்" என்று பதில் கொடுத்தார். மற்றொரு சமயத்திலே அவரை நோக்கி, "ஹிந்துமதம் சிறந்ததா, முகம்மதியமதம் சிறந்ததா?" என்று ஒருவர் வினவினார். அவர் அதற்கு என்ன சொன்னார்.—நற்செய்கையில்லாதுபோயின், ஒருவன் ஹிந்துவாயினும் சரி, முகம்மதியனாயினும் சரி அவன் அழிந்துபோவான்-என்றுவிடைதந்தார். அவர்சொல்லியிருக்கும்வண்ணம், மனத்திலுள்ள பிரமை போய்விடின், அவனுக்கு ஹிந்துவும் சரி, முகம்மதியனுஞ் சரி வேற்றுமையென்பது தோன்றாது. பாக்தாத் நகரிலே ஒருவர் அவரைவிழித்து, "நீர் எந்த மதம்" என்றுகேட்டவுடனே, "எனக்கு மதமென்பதில்லை; எவ்வுலகிலும் ஒரு கடவுள்தான் உண்டு" என்று சொன்னார்.

மேலேகண்டவாறு அவர் போதித்துவந்த காலையிலே, இப்பாரதநாட்டின் பாஞ்சால பிரதேசத்தில் அவருக்குப் பல சிஷ்யர்கள் ஏற்பட்டனர். அந்த சிஷ்யர்களின் வமிசத்தில் தோன்றியவர்களே இப்போது சீக்கியர் எனப்படுகின்றனர். சீக்கியர் என்றால், சிஷ்யர் என்று தான் அர்த்தம். சிஷ்யர்என்பதே சீக்கியர்என மருவிவந்ததுபோலும். சீக்கியர் ஒருவரையொருவர் அழைக்கும்போது "பாய்" என்று சொல்வர்; "பாய்" என்றால் சகோதரன் என்று பொருள். எல்லாரும் சகோதரர்கள் என்ற படிப்பினைகொண்ட மதத்தினர், அனைவரையும் "பாய்" சகோதரன் என்றழைப்பது வியப்பன்று.

அக்காலத்திலிருந்த ஹிந்துக்கள்மட்டுமே அவருடைய மதத்தில் ஈடுபட்டனர் என்பதில்லை; பல முகம்மதியரும் ஈடுபட்டனரென்பது நிச்சயம். அவருடைய மதத்தில் ஈடுபட்டவுடனே, அவர்கள் ஹிந்துவென்றோ, முகம்மதியனென்றோ தங்களைக் கருதவில்லை; குருவின் சிஷ்யனென்றே மதிக்கலாயினர். பல சிஷ்யர்கள் சேர்ந்தவுடனே, குருவென்னும் பட்டம் அவருக்கு இடப்பட்டது. ஆகலின், அவரது பெயர் குருநானக் என்பதாகும். அவருடைய முக்கிய சிஷ்யர்களில் ஒருவர் பெயர் மர்தானா; அச்சிஷ்யர் முதலில் முகம்மதியராக இருந்தவர். இனி, ஷேக்பரீத் என்ற பெரிய மகானும், பக்கிருமான முகம்மதியரொருவரும், குருநானக்கும் பரமநேசர்களாக இருந்தனர். குருநானக் பாடிய சுலோகங்களிலே இஸ்லாம் மதத்தின் உயர்ந்த கருத்துக்களும், ஹிந்துமதத்தின் மேலான லட்சியங்களும் ஏராளமாகக்காணப்படும்.

அவருக்குப்பின் 10 குருமார்கள் தோன்றினார்கள், அவர்களில் ஒவ்வொருவரும் சொல்லிய சுலோகங்களே வரன்முறையாகத் தொகுக்கப்பட்டு இப்போது "கிரந்த ஸாஹிப்" என்று சீக்கியரால் போற்றப்பட்டு வருகின்றன. சீக்கியமதம் என்பதனையும் சீக்கியர் என்ற ஒரு

புதிய ஜாதியினரையும் முதன் முதல் உண்டுபண்ணியவர் குருநானக். அவருக்குப்பின் அவதரித்த பதின்மரும் அம்மதத்தையும், ஜாதியையும் நன்கு ஒழுங்குபடுத்தி வந்தார்கள். குரு நானக்கின் விசேஷத்தை விளம்புவதென்றால் ஒரு புத்தகம் எழுதலாம். அவர் ஏற்படுத்திய மதத்தின் உயர்வை எடுத்துக்காட்டுவதே நமது கருத்தாதலின், அவரைப்பற்றி அதிகம் சொல்லப்போவதில்லை.

தற்போது சீக்கியர் அனைவரும் தமது பெயரின் இறுதியில் "ஸிங்" என்ற மொழியும் கொள்ளுகின்றனர். 'ஸிங்" என்பது சிம்மம் என்ற பதத்தின் சிதைவேயாகும். சீக்கியர் அனைவரையும் சிம்மங்கள்போல் செய்த பெரியவர் குருகோவிந்தர் எனப்படுவோர். சிம்மங்களைப்போல் அதாவது போராண்மையுடைத்த பெருவீரரைப்போல் சீக்கியரை அக்குரு கோவிந்தர் ஆக்கிய காரணத்தை அடுத்த வியாசத்தில்எடுத்துச்சொல்வோம்.

# புராதன நெசவுத்தொழில்.

(ஸ்ரீமான் ஆர். துரைசாமி ஐயர்)

II.

### 1. கதரின் அவசியம்.

முன் காலத்தில் நம்முன்னோர்கள் கஷ்டமில்லாமலும் மிகவும்சௌகரியத்துடனும் தங்களுடைய துணிகளைத்தாங்களே தயார்செய்து கொண்டதும்தவிர அயல் நாட்டினரைக்கூட தங்களுடைய துணிகளால் அவர்களுடைய நிர்வாணத்தை மறைக்கத்தக்க அவ்வளவு நாகரிகதசையில் இருந்தார்கள் என்பதை முன் வியாசத்திலிருந்து நீங்கள் அறிந்திருப்பீர்கள். இப்பொழுதுகூட நாம் விழித்துக்கொண்டு நம் வீட்டிற்குள் ராட்டினத்தைப் பரவச்செய்து கதரை அணியாமற்போனால் நம்முடைய ஸ்திதி மிகவும் அபாயகரமாய்விடும். கிராமங்களில் இருக்கிற மனிதர்களுக்குத் தங்களுக்கு எப்போதுமுள்ள வேலையைவிட வேறொரு உதவிவேலை (Supplementary occupation) வேண்டும். அந்த வேலை நூல் நூற்பதைவிட மேலானது ஒன்றுமில்லை. நம்வீட்டு ஸ்திரீகள்தான் இதை முக்கியம் கவனிக்க வேண்டும். அவர்கள் ராட்டினம்சுற்ற அவகாசம் இல்லையென்றால், அவர்கள் வம்புப்பேச்சில் காலத்தைக் கழிக்கிறார்கள் என்று அறியவேண்டும்.

நம்முடைய ஏழ்மைத்தனத்தை போக்குவதற்கும், நம்மை பஞ்சத்திலிருந்து விடுவிப்பதற்கும் ராட்டினம் சுற்றுவதுதான் முக்கியகருவியென ஏம்மிடம் மகாத்மா காந்தி கொடுத்திருக்கிறார். கதரையே நாம் அணிந்து கொண்டால் சுமார் 60கோடி ரூபாய்களை நம்தேசத்தில் ஏழை மக்களுக்குள் பரவச் செய்கிறோம். 1921ல் பல்லாரி, கடப்பை முதலிய ஜில்லாக்களில் பஞ்சம் வெகு கொடுமையாகத் தாக்கியபொழுது ஜனங்கள் வெகு பரிதாபநிலைமையில் இருந்தார்கள். ஒரு ஸ்திரீ தன்னையும் தன் குழந்தைகளையும் காப்பாற்ற வழியறியாது ஜலத்தில் தன் குழந்தைகளுடன் விழுந்து இறந்தாள். அப்பொழுது நமது காருண்ய கவர்ன்மெண்டார் ரோடுகளில் கல்லுடைக்கும்வேலையைச் சிலருக்குக் கொடுத்து மனிதருக்கு 1½ அணா வீதமும், ஸ்திரீக்கு 1 அணா வீதமும் கொடுத்தார்கள். இவ்வேலையைப் பார்க்கப் பெரும்பாலருக்கு முடியவில்லை. முடிந்த சிலருக்குச் சாப்பாட்டிற்குப் போதுமான அளவு கிடைக்கவில்லை. அந்த இடத்திலேயே காங்கிரஸ் கமிட்டியார் பஞ்சம ஸ்திரீகளிடத்தில் ராட்டினங்களைக் கொடுத்து அவர்களை வேலை செய்யச்சொல்லி தினம் 3 அணாவீதம் கொடுத்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள்பிழைப்பதற்கு இடம்பண்ணினார்கள்

நம் ஸ்திரீகள் வீட்டிலிருந்தே ராட்டினத்தைச் சுற்றுவதால் தெருக்களிலும், தொழிற்சாலைகளிலும் போய் வேலைசெய்து தங்கள் மானத்தை இழக்காமல் கண்ணியமாக வாழ்தல்கூடும். 1813—1820 வருடங்களில் 33,64,420 ஜனஸங்கைகளையுடைய பாட்னா, ஷாஹாபாத் ஜில்லா 3,30,426 பேர்கள் ஒழிந்தவேளைகளில் மட்டும் நூற்றுவந்ததில் வருடத்தில் ஒவ்வொருவரும் ரூ 7—2—9க்கு நூல் தயாரிசெய்து ரூ 23,67,277 அந்த ஜில்லாக்களில் மட்டும் மீறக்கூடியதாக இருந்தது. இதே மாதிரி ஷாஹாபாத், பகல்பூர், கோரக்பூர், மைசூர், பஞ்சாப் முதலிய இடங்களில் அநேக ராட்டினங்கள் சுழன்று அந்த ஜில்லாக்களில் பஞ்சமே இல்லாதிருந்தது.

ஒரு புருஷன, ஸ்திரீ, 4 குழந்தைகளடங்கிய ஒரு குடும்பத்திற்கு வருடத்திற்கு வேண்டிய வஸ்திரங்களுக்கு 60 சேர் நூல்நூற்றால் போதும். அதாவது மாதம் 5 சேர் அல்லது வாரம் 1¼ சேர் ஆகிறது ஒவ்வொரு நாளும் ½ மணி அந்தக் குடும்பத்தில் யாராவது ஒருவர் நூற்றால் தங்களுடைய துணிகளைத் தாங்களே செய்து கொள்ளமுடியும்.

இவ்வளவு சுலபமான காரியத்தை நாம் இதுவரையில் அறியாமலிருந்தது மிகவும் பரிதாபம். இப்போது நமது நாட்டின் நாகரிகமான கைத்தொழில் அழிவதுடன்கூட கோடிக்கணக்கான திரவியங்களை அயல்நாட்

டிற்சனுப்பிவிட்டு நாம் ஏழ்மைத்தனத்தில் பாதவித்துக் கொண்டிருக்கிறோம். இதனாலாவது நமது சுகவாழ்க்கைக்கு ராட்டினத்தைக் கைக்கொள்ளவேண்டாமா?

### 2. சுதேசியமும், சுயராஜ்யமும்.

நம்முடைய ஏழ்மைத்தனத்தை நம்நாட்டிலிருந்து துரத்தினால் அடிமைத்தனம் தானாகவே நீங்கும். நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் புதிய சீர்திருத்தச்சட்டம் (New Reforms) நமது ஏழ்மைத்தனத்தையும், அடிமைத்தனத்தையும் நீக்க சக்தியற்றது. இதை நமது சுதேசியமும் ராட்டினமும் போக்கவல்லது. "ஸ்வராஜ்யம் வரும்வரை பேசாமலிரு. பிறகு இந்திய தொழிலைச் சட்டங்கள்வழியாகக் காப்பாற்றி, நமதுஸ்திரீகள் ராட்டினத்தை எடுக்காமலே நமது நிலைமையை உயர்த்தலாம்" என்று மிதவாதிகள் கூறுகிறார்கள். நமது நாட்டின் கைத்தொழில்களை சட்டங்களினால் காப்பாற்றினால், கோடிக்கணக்கான பசியால் தவிக்கும் ஜனங்களைக் காப்பாற்றமுடியாது. ஆகையால் ராட்டினத்தைத்தவிர நமக்கு வேறு கதியில்லை. ஒவ்வொரு பள்ளியிலும் ராட்டினத்தைப் பரவச்செய்தல் அவசியம்.

நாம் இப்போது துணிகளுக்கு அயல்நாட்டையே நம்பியிருக்கிறோம். அப்படியெனில், நமக்கு ஸ்வராஜ்யம் எப்படிக் கிடைக்கும்? ஸ்வராஜ்யம் விரும்புவோர்கள் அயல்நாட்டின் உதவியை ஒன்றிலும் நம்பாதிருந்தாலொழிய அவர்களின் இச்சைக்குச் சரியான அர்த்தமில்லை. ராட்டினத்தைச் சுற்றுவது நமக்கு பொருமையைக் கொடுக்கவல்லது.

### 3 ராட்டினத்தின் தாஸர்கள்.

ராட்டினத்தை முன்காலங்களில் மஹாராஜாக்களும், மகாராணிகளும் சுற்றிவந்தார்கள். பைபிளில் (Bible) ஆதாம் (Adam) ஏவாள் (Eve) இருவரும் நூல் நூற்றார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் இப்போதைய நாகரிகம் வருவதற்குமுன் ராணிகள் நூற்றுவந்தார்கள் என்று அவர்கள் தேசசரித்திரம் கூறுகிறது. நமது நாட்டில் கபீர்தாஸ் நூல் நூற்றுத்தான் ஜீவனஞ் செய்தார். மொகலாய சக்ரவர்த்தி அவுரங்கசீப் தன் குல்லாய்களைத் தானே நூல் நூற்றுச் செய்துகொண்டார். தற்சமயம் பெரியபெரிய வம்சத்தில் பிறந்தவர்கள்கூட ராட்டினத்தைச்சுற்றிவருகிறார்கள். ஸ்ரீமதி சரளாதேவி சௌதராணி, ரத்னதேவி, ஜான்ஜிரா அரசரின் குடும்பத்தார் முதலான ராஜா, ஜமீன்தார் வம்சத்தினரும் ராட்டினத்தைக் கைக்கொண்டிருப்பது நாம் அறிவோம். இனிமேலாவது நமது கடமை என்னவென்று சொல்லவேண்டுவது அவசியமில்லை.

### 4. மில்துணிகளும், கதரும்.

இந்திய மில்களில் தயாராகும் துணிகளைவிட நெசவுக்காரர்கள் மிகவும் ஜாஸ்தியாக செய்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய்களைக்கொண்ட பெரிய மில்களை ராட்டினம் ஒழிக்கமுடியுமா என்ற சந்தேகம் நம்மில் பெரும்பாலருக்குள் இருப்பது மிகவும்சாதாரணம். ஆனால் நம்முடையநோக்கம் என்னவென்றால், மில்கள் நமது ஏழ்மைத்தனத்தை நீக்குமா? அல்லது ராட்டினங்கள் நீக்கவல்லதா என்பதுதான். ஜர்மனிதேசத்தில் நூதன நூதனமான மெஷின்கள் தயார்செய்யப்படுகின்றன. ஆனாலும் 1914-வருத்திய யுத்தத்திற்குப் பின் அந்த தேசத்தில் பஞ்சமுண்டாகி, மில்களும், மெஷின்களும் அதன் பஞ்சத்தை நீக்கமுடியாமல், மகாத்மாவின் புத்திமதியைக்கொண்டு ராட்டினங்களைத் தயார்செய்து கொடுத்து ஏழ்மைத்தனத்தைக் கொஞ்சம் தீர்த்துக்கொள்ள முயலுகிறார்கள் என்று தெரிகிறது.

மேலும் தொழிற்சாலைகளில் நமது சகோதரர்கள் சகோதரிகளை நடத்தும்விதம் கண்டுணர்ந்தோர் நமது சகோதரிகள் தொழிற்சாலைகளில் போய் வேலைசெய்வதைவிட பசியால் உயிரை விட்டுவிடலாம் என்று சொல்லுவார்கள். அவர்கள் ஆயுளைக்குறைத்துக்கொள்வதோடு, அவர்களிவ்வுலகில் ஜீவித்திருக்கும் சிலகாலங்களிலேயே அனேகவித வியாதிகளால் பீடிக்கப்படுகிறார்கள் என்பது அவர்கள் முகத்தில் காணலாம்.

மில்களில் தயாராகும் துணிகளைவிட ராட்டினத்தில் தயாராகும் துணிகள் நீடித்தும் மிகவும்மிருதுவாகவும் இருக்கின்றன. மில்களில் நமக்கு வேண்டியவிதமான வஸ்திரங்கள் தயாராகவில்லை. நெசவுக்காரர்கள் நமக்குக் கலியாணம் முதலிய விசேஷ தினங்களுக்கு வேண்டியவைகளைத் தயார்செய்து கொடுக்கிறார்கள். இவர்கள் கதர் நூலை உபயோகித்து வஸ்திரங்கள் செய்தால் நமக்கு மில்துணிகளை உபயோகிக்க நேராது.

மெல்லியதான நூல் கிடைக்கவில்லை என்று சொல்கிறவர்கள் நமது தேசசரித்திரத்தைப் படித்தவர்கள் தாங்கள் சொல்வது தவறு என்று அறிவார்கள். 188[illegible]-வருத்தில் டெக்காவிற்கு 20 மைலுக்கப்பாலுள்ள டாமா (Damah) என்ற கிராமத்திலிருந்து 2கிழவிகள் நூற்றநூல் கண்காக்ஷிசாலைகளில் வைக்கக்கூடிய அவ்வளவு சேர்த்தியாக இருந்ததென்று தெரிகிறது. சென்ற காகிநாடா கதர் கண்காக்ஷிசாலையில் இந்தியாவின் என்

லாப் பக்கங்களிலிருந்தும் மிகவும் நேர்த்தியானதும், மெல்லிதானதுமான நூல்களும் வேஷ்டிகளும் வைக்கப்பட்டிருந்தன.

இப்போது ஆரம்பத்தில் கதர் கொஞ்சம் கனமாகத்தானிருக்கும். கொஞ்சம் அனுபவம் ஆக ஆக நேர்த்தியான வேஷ்டிகள் நமக்குக் கிடைக்கலாம். அனுபவம் வருவதற்கு உற்பத்தியாகிற கதரைத் தயாரிப்போரை நாம் ஆதரியப்படுத்தவேண்டும்.

நாம் கதர் அணிவதால் ஆடம்பரமில்லாமல் நமது மனப்பான்மையை சீர்திருத்திக்கொள்ளமுடியும். இதனால்தான் மகாத்மா தன்னுடைய இயக்கத்தில் முதன் முதலாகக்கதரைச் சேர்த்திருக்கிறார்.

## கிராமக் கைத்தொழில்களின் புனருத்தாரணம்.

('மாந்செஸ்டர் கார்டியன்' என்ற பத்திரிகையில் ஸ்ரீ ரெவரென்ட் ஸி. எப். ஆண்ட்ரூஸ் எழுதுகிறார்.)

மில்களிற் செய்யப்படும் உடைகளை விட்டுவிட்டுக் கையினால் நூற்றுக் கையினால் செய்யப்படுமுடைகளைத் தரிக்கவேண்டுமென்ற கதர் இயக்கம் லங்காஷயரைப் பெரிதும் பாதிப்பதாகும். இயந்திரத் தொழிலுடன் கைத்தொழில் போட்டியிட்டு வெகுநாளைக்கு நிலைக்க முடியாது என்று சிலர் வாதிக்கலாம். இக்கூற்று சரியாகாது. இந்தியா, உலகத்திலுள்ள மற்றைய தேசங்களைப் போன்றதல்ல. இந்தியாவின் வேளாண்மைத் தொழில் பருவத்தையொட்டி நடைபெறுகிறது. ஆகையால் வேளாண்மைசம்பந்தமான வேலையில்லாத பருவகாலத்தில் வேறு வேலையில்லாது சோம்பியிருந்து காலங் கழிக்கவேண்டியவர்களாயிருக்கும் ஏராளமான ஜனங்கள் இருக்கின்றனர். இவ்விதம் வேலையில்லாதிருப்பதால் ஏற்படும் பொருளாதார நஷ்டம் சொற்பமல்ல. மேலும் மழையில்லாவிடில் கொடும் பஞ்சங்களதிகரிக்கின்றன. இதற்கெல்லாம் காரணம் கிராமக் கைத்தொழில் நசித்துப்போய்விட்டதே. பருத்திவஸ்திரங்களை அன்னிய நாடுகளிலிருந்து வாங்குவது இந்தியாவின் வறுமையை இன்னும் அதிகரிக்கச்செய்கின்றன.

இந்தியா அரசாங்கத்தாரும், மேனாட்டுக் கல்வியறிவுடைய பலரும் இந்தியா முழுவதிலும் இயந்திரத்தொழிலை முதன்மைப்படுத்த முயற்சிக்கின்றார்கள். இது அபாயகரமான யோசனையாகும். எனக்கு இயந்திரத் தொழில்முறையைப்பற்றி பூர்த்தியான அனுபவமுண்டு. சென்னை, பம்பாய், ஆமதபாத் மில்களின் தொழிலாளரின் நிலைமைகளை நான் நேரிலிருந்து அனுபவமூலமாய்த் தெரிந்துகொண்டிருக்கிறேன். மில்களில் ஏற்படும் வேலை நிறுத்தங்களுக்குக் கணக்கில்லை. நான் அடிக்கடி முதலாளிகட்கும் தொழிலாளிகட்கும் சமாதானஞ் செய்யவேண்டியதிருந்தது. ஆலைத்தொழிலினால் பொதுஜனங்கள் கிராமங்களில் சுத்தஆகாயத்தில் பரந்த வெளியில் இருப்பதை விட்டுவிட்டு நகரங்களுக்கு ஓடுவது உண்மையில் பரிதபிக்கத்தக்கதே. மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை அரசியற் சம்பந்தமுடையதுபோன்றே பொருளாதார சம்பந்தமும் உடையதென்பது இங்கிலாந்தில் இன்னும் அறிந்துகொள்ளப்படவில்லை. கதர் பரவாவிடில் சுயராஜ்யம் பெறுவது அசாத்தியமென்பதே மகாத்மா சிறைக்குச் செல்லுமுன் கடைசியாகச்சொன்ன செய்தியாகும். அவர் சென்றபின் சட்டசபைப் பிரவேசத்தைப்பற்றி தலைவர்களுக்குள் அபிப்பிராயபேதம் ஏற்பட்டபோதிலும் கதர் விஷயத்தில் சகலரும் ஏகமனதாகவே யிருக்கின்றனர். ஒத்துழையா இயக்கம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே இந்திய கிராமங்களில் கைநெசவு சிறிது இருந்துவந்திருக்கிறது. இந்தியர்கள் தரித்துவந்திருக்கும் உடைகளில் 100-க்கு 20 பங்கு கையினால் நெசவு செய்யப்பட்டவை என்று கூறலாம். ஒத்துழையாமை இக்கைநெசவை மும்முரமாக்கியது. வங்காளத்தில் நான் வசிக்கும் கிராமத்திற் கருகிலேயே கதர் பெருகுவதற்கு ஆரம்பித்ததைக் கண்ணுற்றேன். அஸ்ஸாமில் முன்பு நசித்துப்போயிருந்த கைத்தறிகள் புத்துயிர்பெற்று எழுந்தன. மகாத்மா காந்தியின் வாசஸ்தலமாகிய ஸபர்மதியில் நூல்நூற்றலையும், நெசவையுங் கற்பிக்கும் பெரிய கலாசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அங்கு நூற்றுக்கணக்கான தலைவர்கள் வேலை கற்றுக்கொள்கின்றனர். இந்திய கிராமஜனங்கள் மூன்று வகைகளில் தமது உடைகளைப் பெறக்கூடும் —(1) ஜப்பான், லங்காஷயராகிய இடங்களிலிருந்து (2) இந்தியாவின் ஆலைகளிலிருந்து (3) கிராமக் கைத்தொழிலின் மூலம். மூன்றாவதாகச் சொல்லப்பட்டது தீவிரமாய் அதிகரிக்கும் பட்சத்தில் மற்ற இரண்டும் வெகுவாய்ப் பாதிக்கப்படும். ஜப்பான் இந்திய மில்களிற் செய்யப்படும் துணிகள் லங்காஷயரிற் செய்யப்படுபவையைக்காட்டிலும் முரடானவையாயிருப்பதா லவைகளுக்கே அதிக தீங்குவிளையும் இதனால் கதர் பரவுவதற்குத்தக்க சாதனங்களிருக்கின்றன. ஆனால் இந்தியாவில் உடைகளைப்பற்றி தற்போதிருந்துவரும் மனப்பான்மை அவ்வளவு திருப்திகரமாயில்லை. இந்தியா, பிரிட்டனிடமிருந்து சாமான்கள் வாங்கும் தேசங்களில் முதன்மையானதாயிருக்கின்றது. இருந்தாலும் கதர் இயக்கத்துடன் பிரிட்டிஷ் சாமான்கள் பகிஷ்காரமும் சேர்ந்துகொண்டால் இங்கிலாந்து, திண்டாட்டப்படவேண்டியதே. தம்மிடத்திலிருந்து எல்லோராலும் அதிகமான சாமான்களை வாங்குபவர்களிடம் பிரிட்டிஷார் இவ்வாறு அசட்டையாய் நடந்துகொள்வது விநோதமாகவே இருக்கின்றது. [நா-மி.]

# கிராம சீர்கேடும், உத்தியோக மோகமும்.

(ஸ்ரீமான் ஜி. எம். இராமஸ்வாமி ஐயர், புத்தகரம்)

கிராம அமைப்பும், சீருஞ்சிறப்பும் முன்காலத்தில் எப்படி இருந்ததென்று முன் வியாசங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த வியாசத்தில் அது ஏன் கெட்டுவிட்டது? எப்படிக் கெட்டு விட்டதென்று கொஞ்சம் இதில் விவரிக்கிறேன். இது இப்போதிருக்கிறபடி இவ்வளவு கேவலமான ஸ்திதிக்கு வருவதற்கு ஆரம்பம் ஆங்கிலேயர்கள் இந்த நாட்டுக்கு வந்ததற்குப் பிறகுதான் என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஈஸ்டிந்தியகம்பெனியார் நமது தேசத்தை ஆண்ட பல சிற்றரசர்களை ஒருவருக்கொருவர் விசேஷ துவேஷம் உண்டாகும்படி செய்து அதில் ஒருவரை வசியம் செய்துகொண்டு அவர்களுடைய சகாயத்தினால் மற்றவர்களைத் தோல்வியடித்து அந்த நாட்டைப் பிடிப்பதும், இந்த மாதிரி ஒவ்வொரு நாட்டிலும் செய்து கொஞ்சங் கொஞ்சமாக ஒவ்வொரு நாட்டையும் தங்கள்வசமாக்கிக் கொண்டார்கள். அதன்பிறகு ஆட்சி செய்வதற்கு ஒவ்வொரு உத்தியோகங்களையும் ஏற்படுத்தி, அதற்கு நமது ஜனங்களில் அநேகருக்கு உத்தியோகங்கள் கொடுக்க ஆரம்பம் செய்திருக்கிறார்கள். அப்போது கொடுக்கப்பட்ட உத்தியோகங்களில் விசேஷ சௌகரியமும், அதிகாரமுமிருப்பதாய்த் தோன்றியதால் வெகுஜனங்கள் ஈடுபட ஆரம்பித்தார்கள். இப்போது ஒவ்வொரு முக்கிய பட்டணங்களிலும் ஜன நெருக்கத்தாலும், சுகாதாரக் கேட்டினாலும் எவ்வளவு கேவலமாய் "நரகப்பட்டணத்திற்கு" சமானமாய் இப்போ இருக்கிறதோ அப்படி முன்காலத்தில் இருந்ததில்லை. இப்போது பட்டணங்களாய்ச் சொல்லப்படும் இடங்கள் முன் ஒரு பெரிய கிராமமாய் இருந்ததேதவிர இப்போதுபோல ஜனக்கூட்டம் நிறைந்ததாயிருந்ததில்லை. உத்யோகத்திலிருக்கிற மோகத்தினால் எவ்வளவோ ஆயிரக்கணக்கான கிராமவாசிகள் கிராமத்தில் தம்முன்னோர்கள் சம்பாதித்து வைத்திருந்த பூஸ்திதிகளை பெத்தகம், போக்கியம் முதலியதுவைத்துக் கடன் வாங்கிப் படித்து, இப்போது உத்தியோகத்திற்கு அலையும் ஸ்திதிக்கு வந்துவிட்டார்கள். அசைக்கமுடியாத மோகம் ஏற்பட்டதாலும், எவ்வளவு கீழான வேலையும் குறைந்த சம்பளத்திற்கும் வேலைசெய்ய ஆவல்கொண்டு சர்க்கார் உத்தியோகம் ஒன்று கிடைத்தாலும் போதும் என்ற எண்ணம் ஜனங்களுக்கு ஏற்பட்டவுடன் ஆரம்பத்தில் உத்தியோகங்களுக்கு இருந்த அதிகாரமும், கௌரவமும் கொஞ்சங்கொஞ்சமாய்க் குறைந்து இப்போது ஒன்றுமே இல்லாமற் போய்விட்டது. கிராமத்தில் ஒற்றுமையாயும், சுகமாயும் வாழ்ந்துவந்த வாழ்வு போல் வயிற்றுப்பிழைப்புக்குப் பட்டணங்களில் வசிக்க அவசியம் ஏற்பட்டவுடன் முன் எந்தெந்த குணங்களிருந்ததோ அவையாவும்போய், சகோதர உணர்ச்சி, சகிப்புத்தன்மை முதலியனயாவும்போய், தன்னலம் பேயாடி நிற்கிறது. ஒவ்வொருவனுக்கும் தன் வயிறு வளர்க்கப் பெரும்பாடு படவேண்டியிருப்பதால் நல்ல காரியங்களில் ஈடுபட்டு, தேசசேவை, கடவுள் சேவை முதலியது செய்யவும், ஒற்றுமைக்கு அநுகூலமான பொதுக்காரியங்களில் ஈடுபட அவகாசம் இல்லாமல், ஒருவருக்கொருவர் பொறாமையும், துவேஷமும் உண்டாகி, தேசத்தில் ஒற்றுமை இல்லாமற் போய்விட்டது.

நமது பாரததேசத்தில் மொத்தம் 7 லட்சத்திற்கதிகமான கிராமங்களிருப்பதாய் அறிக்கை ஒன்று கூறுகிறது. சர்க்கார் நடவடிக்கைகளைக் கவனித்தால் 'கிராமப் பஞ்சாயத்து' 'கிராமப் பஞ்சாயத்து கோர்ட்' முதலியவை ஏற்படுத்தி நன்கு நடைபெறச்செய்ய எவ்வளவு தியானம் செலுத்துகிறார்களென்பதும், இது விஷயத்தில் எவ்வளவு பணம் செலவுசெய்யப்படுகிறது என்பதுந்தெரியவரும். மற்றொருபுறம் காங்கிரஸின் அமைப்பையும், போக்கையும் கவனிக்குங்கால், அதிலும் கிராமங்களில் சபைகள் ஏற்படுத்தல், தொண்டர்களை ஸ்திரமாகக் கிராமங்களில் வசிக்கும்படிசெய்து அவர்கள் மூலமாய்க் கிராமத்திற்குவேண்டிய அநுகூலங்களைச்செய்து ஜனங்களைச் சீர்திருத்தல் ஆகிய இவைகளே முக்கிய அம்சங்களாய்க் கருதப்படுகின்றன. ஆகையால் மற்றப் பட்டணங்களுக்கும், மொத்தமாய்த் தேசத்திற்கும் நன்மைபயக்கக்கூடிய அடிப்படையான காரியஸ்தலம் கிராமங்களேயாம். தற்காலம் பெயர்பெற்ற க்ஷேத்திரங்களில் பெரும்பான்மையான ஸ்தலங்கள் கிராமங்களேயாகும். காளிதாஸர், ஆங்கலக்கவி ஷேக்ஸ்பியர் முதலியவர்கள் கிராமங்களையும், ஆங்கு ஆனந்திக்கச் சாதனங்களிருப்பதால் அதின் இயற்கை யமைப்பையும் அளவில்லாமல் வர்ணித்துக் கூறியிருக்கின்றனர். மகாத்மா காந்தியடிகளுக்குத் தலைவராய்விளங்கிய உலகெங்கும் புகழ்பெற்ற காலஞ்சென்ற, ருஷ்யா மேதாவி, "கவுண்ட் லியோ டால்ஸ்டாய்" குடியானவர்களுக்கும், அவர்களது இருப்பிடமாகிய கிராமங்களுக்குமே நன்மை பயக்குமாறு தனது வாழ்நாளைக் கழித்துவந்தார். அந்தியகாலத்தில் அன்னார் 'மாஸ்கோ' நகரை விட்டுவிட்டு, ஓர் சிறிய கிராமத்திற்குச் சென்று, அங்கு தாமதித்து வந்தார். இறக்குங்கால் தன்னைச் சூழ்ந்திருந்தவர்களைப் பார்த்து,

273 462

"ஆயிரக்கணக்கான நிரபராத ஜனங்கள் மற்ற இடங்களில் இதேசமயம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். புறப்பட்டுச் செல்லுங்கள்; கிராமங்களை முன்னிருந்த உன்னதஸ்திதிக்குக் கொண்டுவர முயற்சியுங்கள்" என்றார். ஆங்கில மகாகவி, எ. போப் என்பவர் கூறியிருப்பதாவது:—"நல்ல சுத்தமான காற்றுள்ள சிறு குடிசைகளில் வசித்து இரவில் நல்ல தூக்கத்துடனும், பகலில் மனச்சாந்தியுடன் வேலையும்செய்து, தனது முன்னோர்களால் தனக்குக் கிடைத்த சிறு நிலத்தை உழுது பயிரிட்டு, கவலையின்றி ஒருவருக்கும் தன்னை அறிவித்துக்கொள்ளாமல், கடைசியாய் இவ்வுலகத்தை விட்டேகும் ஆத்மா, எவ்விதத்திலும் "ஆடம்பர வாழ்வுடன் கல்லறைகளும் ஞாபகச் சின்னங்களும் கட்டி வைக்கப்பட்டு இறந்துபோகும் மனிதனைவிட தாழ்ந்தவரல்ல" என்பதாம். 'படிப்பு' என்றால் ஏடுத்தஆங்கிலம் தமிழ் முதலிய புஸ்தகங்களைத் தடங்கலன்றியில் படிப்பதும், முற்கூறிய பாஷைகளில் சற்று நன்கு எழுதத் தெரிந்துகொள்வதுந்தான் என்று ஒருவர் கூறுவாரானால், தற்காலம் படித்தவர்கள் ஆயிரக்கணக்காய் உலகில் அகப்படுவார்கள். உண்மையாகப் படித்தவர் கிடைப்பது அரிது. 'கல்வி' என்பதைப் பின்னர் விவரிப்போம். ஆனால் நமது கிராமவாழ்வுக்குக் கேடு வந்ததற்குக் காரணம் மகாத்மாஜி கூறுவதுபோல் "இயற்கையையும், அதின்மூலம் நமது பக்கத்திலும், அண்டையிலும் நடக்கும் சுலபமான நாடகத்தைப்பார்த்து, ரமித்துப் பொருளை அறிந்துகொள்ளாமல் 'மித்யை'—பொய்யாகிய நடிப்பு நாடகத்தைக்கண்டு களிகூற விழைவதுதான்."

---

# இலங்கைக்கூலிகளின் கஷ்டமும், இந்தியாவின் நஷ்டமும்.

(ஸ்ரீமான் வே. ராகவய்யர், புள்ளமங்கலம்.)

இலங்கைத் தீவைப்பற்றி நம் நேயர்களில் சிலர் பார்த்தும், கேள்விப்பட்டுமிருக்கலாம். அத்தீவில் வியாபாரம் மிகவும் மிகுதி. அங்கு ரப்பர், தேயிலை, தென்னை, கமுகு முதலியவைகள் முக்கியமான விளைப்பொருள்கள். நெல்லையும் சிலவிடங்களில் பயிர் செய்கிறார்கள். ஆனால் மிகவும் கம்மி. அத்தீவிலுள்ள ஜனங்கள் தஞ்சை ஜில்லாவிலுள்ள அரிசியையும், ரங்கூன் அரிசியையும் நம்பியிருக்கிறார்கள் என்று கூசாமல் கூறலாம். இதைவிட்டு அத்தீவிலிருக்கும் தோட்டங்களைப்பற்றி சிறிது ஆராய்வோம். ஷை தோட்டங்கள் அனேகமாய் வெள்ளையர்களுக்கே சொந்தமானவை. ஒவ்வொரு தோட்டத்திலும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைசெய்து வருகின்றனர். இத்தொழிலாளர்களில் நம் தென்னிந்தியர்கள்தான் அதிகம். முக்கியமாய் தமிழ்மக்கள்தான் மிகுதி. அங்குள்ள நம் தொழிலாளர்கள் படும் கஷ்டத்தைப்பற்றி எழுதப்புகின் அந்தோ பாவம்! உடல் நடுங்குகிறது; கண்ணீர் பெருகுகிறது. பரிதாபம், பரிதாபம். இச்சஞ்சிகை இடந்தருமோ? இடந்தந்தபோதிலும் எழுதத்தான் மனம் வருமோ! நம் தென்னாட்டுத் தமிழ்மக்களை இலங்கைத் தோட்டக்காரர்கள் மிகவும் கேவலமுள்ள விலங்கினங்களைப்போல் பாவித்து அன்னார்களை ஹிம்சித்து வருவது பத்திரிகைவாசிக்கும் நேயர்கள் அறிந்ததே. (இலங்கைத்தீவில் மாத்திரமல்ல, நம்மவர்கள் உள்ள எல்லாக் குடியேற்ற நாடுகளிலும் நம் சகோதரர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.) அம்மாதிரியான கஷ்டங்களை நம்தொழிலாளர்கள் அனுபவியாவண்ணம் தடுக்கும்பொருட்டு நம்தேச வர்த்தமானப் பத்திரிகைகளும், நம் தேசத்திலுள்ள சில பெரியோர்களும் கிளர்ச்சிசெய்து வருவதும் நம் நேயர்கள் அறிந்ததே. ஆனால் இக்கிளர்ச்சியைக் கூலியாள் சேர்க்கும் சங்கத்தார் பொருட்படுத்தாமல் பன்மடங்கு ஜாஸ்தியாகப் பிரசாரம் செய்து அவர்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்கின்றனர். உதாரணமாக, இலங்கைக் கூலியாள் சங்கத்தைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். இங்கிலீஷில் ஷை சங்கத்திற்கு (Ceylon Labour Commission) என்று சொல்லுவார்கள். இச்சங்கத்தாருக்கு இலங்கையிலுள்ள தோட்டக்காரர்களின் சங்கத்திலிருந்து ஏராளமான பொருளுதவி கிடைக்கின்றது. ஷை பொருளைக்கொண்டு ஷை சங்கத்தார் நம் தென்னிந்தியாவில் அனேகம் டெப்போக்களை ஏற்படுத்திக்கொண்டும், ஏராளமான சிப்பந்திகளுடன் பிரசாரம்செய்து ஒன்றுமறியாத நம் மக்களை ஏமாற்றி (மாடுகளை பவுண்டில் அடைப்பதுபோல்) அவர்களை அழைத்துப் போய் டெப்போவில் அடைத்துவிடுகிறார்கள். இம்மாதிரி நம் மக்களை அழைத்துச் செல்வோருக்குக் கங்காணி என்று பெயர். இக்கங்காணிகளின் வேலையைப்பற்றிச்சிறிது ஆராய்வோம். இவர்கள் ஒன்றுமறியாத நம் ஏழைமக்களிடம் சென்று (ஓநாய் ஆட்டுக்குட்டிக்காக) பரிந்து பேசுவதுபோல், அவர்களுடைய நிலைமையைப்பற்றி பரிதாபமாக துக்கிப்பதுபோல் பாசாங்குசெய்து அவர்கள் இதைவிட்டுக் கிளம்பி இலங்கைக்குப்போனால் ஒரு நாளைக்கு ரூ 1 முதல் 3 வரை ஊதியம் பெறலாமென்றும், இங்குள்ள உங்கள் வீட்டைப்பார்க்கிலும் இலங்கைத்தீவில் மாடமாளிகைகளில் சுகமே வாழலாமென்றும் ஆசைவார்த்தைகள் பலபேசி நம் சகோதரர்களை பிரமிக்கும்படிசெய்தும், ஏமாற்றியும், அவர்களின் மனதைக் கரையும்படி

பேசியும் காரியத்தைச் சாதித்துக்கொள்கின்றனர். நம் ஏழைமக்களை அழைத்துச்செல்லத் தென்னிந்திய ரயில்வேக் கம்பெனியாரும் பிரத்தியேகமான அறைகளை ஒழித்துவிடுகிறார்கள். இம்மாதிரியான மோசவழிகளை நிறுத்தவும், ரயில்வேக் கம்பெனியாரைக் கண்டிக்கவும் நம் மக்களுக்கு உரிமையில்லை. அரசாங்கம் கம்பெனியாருடையதன்றோ? நமக்கு என்ன பாத்தியமிருக்கிறது. இங்குள்ள இலங்கைக் கூலியாள் சங்கத்தார் வரவர நூதன முறைகளைக்கையாண்டு கூலிகளைச்சேர்த்து வருகின்றனர். உதாரணமாக, உயர்ந்த கடிதத்தில் இலங்கையிலுள்ள தோட்டம், அதில் கூலிகள் வேலைசெய்யும் மாதிரி இவைகளைப் (Photo) படம் பிடித்தும், கூலியாளாக இலங்கைத் தீவிற்குப்போக விரும்புவோர் அனுஷ்டிக்கவேண்டிய விதிகளையும் பெரிய கொட்டை எழுத்தில் அச்சடித்து, ஜனநெருக்கமுள்ள கிராமங்களில் ஒட்டியிருப்பதோடுகூட, கங்காணிகளில் பிரசாரமும் செய்துவருகின்றனர். இவர்களின் பிரசாரத்தால் 5—5—24ல் வெளியான மித்திரனில் சென்றவருஷம் ஆறு மாதகாலத்தில் 26,541 கூலிகளும், இந்தவருஷம் அதே ஆறு மாதகாலத்தில் 45,561 கூலிகளும் சிலோனுக்குச் சென்றிருக்கின்றனர். வருகிற ஆறு மாதத்திற்குள் 75,010 கூலிகள் போவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறதாம். மேற்கண்ட புள்ளி விபரங்களிலிருந்து கங்காணிகளின் நூதனப் பிரசாரம் பலித்து வருகிறதன்றோ?

அங்குள்ள நம்தமிழ்நாட்டுச்சகோதரர்கள் நெற்றிவியர்வை நிலத்தில்விழ கஷ்டப்பட்டுபெறுகிற ஊதியமோ அவர்களின் காலக்ஷேபச் செலவுகளுக்குப் போதாததாய் இருக்கிறது. இவர்களின் சந்ததிகளுக்குப் பள்ளிக்கூடமும் கிடையாது. இவர்களுக்கு வியாதியோ செப்பத்தாமன்று. இவர்களுக்கு வைத்திய உதவியும் கிடையாது. நம்மக்கள் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரையில் தோட்டங்களில் வேலைசெய்வதைத்தவிர பிறிதொன்றையும் அறியாமல் மிகுந்த கஷ்டப்பட்டு ஜீவனம்செய்துகொண்டு வருகிறார்கள். இவர்கள் அனுமதியன்றியில் வேலைக்குச் செல்லாமல் இருந்தாலும் சரி, கொஞ்சம் தாமதமாய் வேலைக்குச் சென்றாலும் சரி இவர்கள் பாடு ஆபத்துதான். தலைமைகூலி (மேஸ்திரி) அவர்களைப் பலவிதத் துன்பங்களுக்குட்படுத்துவாராகையால் மேஸ்திரி பதவியிலுள்ளவரை தொழிலாளிகள் கடவுளிடம் பயபக்தியுடனிருப்பதுபோல இந்தமேஸ்திரி என்ற தேவதைகளிடம் நடந்துகொண்டு அன்னாரின் தயவைப் பெற்றிருக்கவேண்டும். இவ்வளவு நிர்ப்பந்தத்திலிருந்து சமாளிப்பது பெரிய காரியமல்ல. அந்தோ! அவர்கள் உண்ணும் உணவு மகா கேவலம். தொழிலாளர்களுக்கென்றே உற்பத்திசெய்து தோட்டக்கார முதலாளிகள் வாங்கிவைத்துக்கொண்டு தொழிலாளர்களுக்குக் கொடுப்பார்கள். அரிசியில் கல்லும், நெல்லும், உமியுமிருப்பதோடு ஒருவிதமான நாற்றமுமடிக்குமென்றால், பாக்கி சாமான்களைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. அச்சாமான்களைக்கொண்டு சமைக்கப்படும் உணவு மனிதவர்க்கம் கண்டறியாதபடி அவ்வளவு மேன்மையாயிருக்கும் மேன்மையென்று கூறுவதென்செய்வது. இவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டு முதலாளிகளுக்கு லாபத்தைச் சம்பாதித்துக்கொடுத்தபிறகு, தன் தாய்நாட்டின் ஞாபகமும், உற்றார் உறவினரின் ஞாபகமும் வந்து தாய்நாட்டிற்குச்செல்ல அனுமதிகோரினால், அதுவும் இவர்களுக்குக் கிடைப்பது துர்லபம். குதிரைக்கொம்புதான். அனுமதியில்லாமல் தொழிலாளி வேலைக்குச் செல்லாமலிருந்தால், அப்படி வேலைக்குச் செல்லாமலிருக்கும் தொழிலாளியைத் தண்டிக்கக்கூடியபடிக்கு அத்தீவின் அரசாங்கத்தார் சட்டமியற்றியிருக்கின்றனர். அதனால் அரசாங்கத்தார் தோட்டக்காரமுதலாளிபால் அனுதாபமுடையவர்களென்று நினைத்துவிடக்காது. நம்மக்கள் சார்பாகவும் அத்தீவின் அரசாங்கத்தார் ஒரு சட்டமியற்றியிருக்கின்றனர். (கடப்பாறையை விழுங்கியவனுக்குச் சுக்கு கஷாயம்) ஏற்ற மருந்து என்பதுபோன்ற உதாரணத்தை தொழிலாளருக்குச் சாதகமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்டத்திற்குக்கூறலாம். இதனால் நம் தொழிலாளர்களுக்கு யாதொரு விதமான நன்மையும் உண்டானதாகத் தெரியவில்லை. ஆனால் சட்டம், நீதி, அமைதி. ஒழுங்கு இவைகளுக்கும் தோட்டக்கார முதலாளிகள் வகையறாக்களுக்கும் வெகுதூரம். அதைப்பற்றிப் பிறகு விரிவாக எழுதுவோம். நம் இந்திய தேசத்திலும் எவ்வளவோ எண்ணிறந்த தோட்டங்களில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைசெய்து வருகின்றனர். ஆனால் வெளிநாட்டில் நம்மவர்படும் கஷ்டங்களைப்போல் அவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்கவில்லை. நம் நாட்டில் எவ்வளவோ மிராசுதாரர்கள் அநேகம் கூலியாட்களை வைத்து வேலை வாங்குகின்றனர். அவ்வளவு கொடுமையாக மிராசுதாரர்கள் நடந்துகொள்ளவில்லை. நம் நாட்டில் வேலைசெய்துவரும் தொழிலாளர் நிலைமையைப்பற்றியும் வெளிநாட்டில் வேலைசெய்துவரும் தொழிலாளர் நிலைமையைப்பற்றியும் சற்று சிந்தித்தால், வெளிநாட்டில் நம்மவர் படுங்கஷ்டந்தான் மிகுதி. இம்மட்டோ, நம்மவர்கள் வெளிநாடுகளில் மானங்கெட்ட ஜீவனம் செய்கிறார்கள் என்று கூசாமல் கூறலாம். அற்ப குற்றத்திற்காக பெருந்தண்டனை கிடைக்கின்றது. (தொடரும்)

# கிராமப் பஞ்சாயத்து.

## புராதன இந்தியாவின் நிலைமை.

(ஜில்லா போர்டு மெம்பர், சேங்காலிபுரம் ஸ்ரீமான் வி. பஞ்சாபகேச ஐயர்.)

கிராமங்கள் க்ஷேமமாயிருந்து அதில் வசிப்பவர்களும் திருப்தியுடனிருந்தால்தான் அத்தேசத்தின் நிலைமையும் ஸ்திரமாயும் திருப்திகரமாயுமிருக்குமென்பது நம்மிந்தியாபோன்ற கிராமங்கணடர்ந்த நாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட மூலமந்திரம். இக்கொள்கையை அனுசரித்தே நம் தேசத்திய புராதனசட்டங்களை யியற்றிய மகரிஷிகள் கிராமங்களைக்காப்பாற்றுவதில் மிகக் கவலையுள்ளவர்களாய் ஸ்மிருதிகளை வரைந்திருக்கிறார்கள். கிராமங்களில் நிர்வாக வேலைகளைச் செய்ய கிராமாதிகாரிகளையும் ஜனங்களுக்குண்டாகும் தகரார்களைத் தீர்த்து வைக்கச் சபைகளையும் ஏற்படுத்தச் சொல்லியிருக்கிறார்கள்.

பிராசீனரான மனு சொல்லுவதாவது:—

“கிராமங்களை ரக்ஷிப்பதில் எப்போதும் அடியிற்கண்டவிதிகளை ஆசரிக்கவேண்டும். சரிவர ரக்ஷிக்கப்பட்ட கிராமங்களையுடைய அரசனே சுகத்தையடைகிறான். இரண்டு, மூன்று அல்லது ஐந்து கிராமங்களுக்கு மத்தியில் ஒரு ரக்ஷாஸ்தானமும் அப்படியே நூறு கிராமங்களுக்கு மத்தியில் ஒன்றும் ஏற்படுத்தப்படவேண்டும். ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு அதிபதியையும் அப்படியே பத்து, இருபது, நூறு, ஆயிரம் கிராமங்களுக்கு முறையே ஒவ்வொரு அதிபதியையும் ஏற்படுத்த வேண்டும். கிராமங்களிலுண்டாகும் குற்றம் குறைகளை கிராமாதிபதி உடனுக்குடன் நேரில் பத்து கிராமத்ததிபரிடமும், அவர் இருபது கிராமாதிபரிடமும், அவர் நூறு கிராமாதிபரிடமும், அவர் ஆயிரம் கிராமாதிபரிடமும் நேரில் தெரிவிக்கவேண்டும். பிறகு இவர்களுக்குக் கிராமவாசிகள் கொடுக்கவேண்டிய சன்மானங்களைச் சொல்லுகிறார். கிராம வாசிகளுக்குச் செய்யவேண்டியசவுகரியங்களையும் மற்றும் கிராமகாரியங்களையும் அரசனின் மனதுக்கிசைந்த மற்றொரு சாம்பலில்லாத மந்திரி செய்யவேண்டும். ஒவ்வொரு பட்டணத்திலும் எல்லாக் காரியங்களையும் கவனிக்கக்கூடிய பயமுண்டுபண்ணத் தக்கவனை ஒரு அதிபதியை நியமிக்கவேண்டும். அவன் தன் எல்லைக்குட்பட்ட எல்லா கிராமாதிபதிகளின் நடத்தைகளையும், சாரர்களைக் கொண்டு நன்கு அறிந்துகொள்ளவேண்டும். ரக்ஷணத்தில் நியமிக்கப்படுபவர்கள் அநேகமாக பிறர் சொத்தை அபகரிப்பவர்களாக ஆய்விடுவது சகஜம். ஆகையால் இவர்களிடத்திலிருந்து தன் பிரஜைகளை அரசன் ரக்ஷிக்கவேண்டும். இவர்கள் ஜனங்களிடமிருந்து நியாய விரோதமாகப் பணம் சம்பாதித்தால் அவர்களின் சர்வ சொத்தையும் பிடுங்கிக்கொண்டு அரசன் அவர்களை தேசத்தைவிட்டு வெளியே துரத்திவிடவேண்டும்.

இப்படி நிர்வாக அலுவல்களைச் சொல்லிவிட்டு அடுத்த அத்தியாயத்தில் நீதி விசாரணையைப் பற்றி ஆரம்பிக்கும்பொழுதே “விவகாரத்தைத் தீர்ப்பதற்காக, அரசன் ஆலோசனை சக்தியுள்ள மந்திரிகளுடன், வாக்கு, கை, கால் முதலியவைகளின் சபலத்தை யடக்கி விநயத்தோடு கூடியவனாய்ச் சபையை அடையவேண்டும்” என்றார். பிறகு விவகாரங்களைப் பதினெட்டு விதமாய்ப் பிரித்து அவைகளைத்தீர்க்கவேண்டிய முறைகளைச் சொல்லுகிறார்.

மற்றொரு பெரிய ஸ்மிருதிகர்த்தரான, “யாக்ஞியவல்கியர்” நீதி விசாரணையைப் பற்றிச்சொல்வதாவது :—

“ அரசன் கோபம் ஆசை இவைகளை ஒழித்தவனாய் தர்மசாஸ்திரத்தை யனுசரித்து, வித்துவான்களோடு கூட விவகாரங்களை விசாரிக்கவேண்டும். சத்துருக்களிடத்தும் சிநேகிதர்களிடத்தும் நடுநிலைமையும், சாஸ்திரங்களிற் பயிற்சியும், தர்மங்களின் அறிவும், சத்தியவாதியுமானவர்களை

சபையோர்களாக நியமிக்கவேண்டும். காரியவசத்தால் அரசன் தான் சபையில் நேரில்கலந்துகொள்ளமுடியாவிடில் சகல தர்மமுமறிந்த மற்றொருவரைச் சபைக்குத்தனக்கு பதிலாக அனுப்பவேண்டும். ஸ்னேகத்தாலாவது, ஆசையாலாவது பயத்தாலாவது நியாய விரோதம் செய்யும் சபையோர்களில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாய் விவாதத்தின் மதிப்புக்கு இரட்டிப்பு மடங்கு அபராதம் போடவேண்டும்.”

இவைகளிலிருந்து நியாயம் விசாரிப்பதற்கு ஒரு தனி மனிதனின் இஷ்டத்தைக்காட்டிலும் சில மத்தியஸ்தர்களின் ஆலோசனை சிறந்தது என்பது நம் தேசத்தில் முன்பே ஒப்புக்கொள்ளப்பட்டது என்றேற்படுகிறது. மிஸ்டர் ‘லாயிட் ஜார்ஜ்’ ஆங்கில அரசாங்கத்தின் பிரதம மந்திரி உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டு 19-12-16ல் பேசிய முதல் பிரசங்கத்தில் “பலர் சேர்ந்து ஆலோசிப்பதில் விவேகமுண்டு என்பது உண்மை. ஆனால் அது கீழ் தேசங்களுக்காக சமாதான காலத்தில் எழுதப்பட்டது” என்றார். சண்டைக்காலத்தில் பலர் சேர்ந்து யோசிப்பதைக் கண்டிக்க வெண்ணி இப்படிச் சொல்லியிருந்தபோதிலும் பலர் சேர்ந்து யோசிப்பதில் விவேகமுண்டு என்பதை அவர் ஒப்புக்கொண்டார். எந்தக்காலத்தில் எந்த தேசத்தில் எப்படியிருந்தபோதிலும் நம் தேசத்தில் அரசர்களில் நல்லவர்களும் கெட்டவர்களும் எந்த முக்கிய காரியத்தையும் தன்னிஷ்டப்படி செய்யாமல் தர்மந் தெரிந்து அனுஷ்டிக்கும் ஆசாரசீலர்களான புத்திமான்களுடன் ஆலோசித்தபிறகே செய்வதென்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். உதாரணமாக, ஸ்ரீ ராமாயணத்தில் தசரதர் ராமனுக்கு முடி சூட்ட ஆசைகொண்டு, அதைத் தானே செய்துவிடக் கூடுமாயினும் தன் தேசத்துப் பிரஜைகளில் முக்கியமானவர்களைக் கூட்டி, தன்னபிப்பிராயத்தை லட்சியம் செய்யாமல் ஆலோசனை சொல்லும்படி கேட்டார். தன் அபிப்பிராயத்தைக் காரணங்களுடன் சொல்லி கடைசியில் சபையோர்களைப் பார்த்து தசரதர் பின் வருமாறு சொன்னார்:—

‘இக்காரியம் அனுகூலமாயும் என் யோசனை சரியாயுமிருந்தால் தாங்கள் அனுமதி கொடுங்கள். அல்லது நான் என்ன செய்யவேண்டுமென்பதைச் சொல்லுங்கள் இக்காரியம் எனக்குப் பிரியமாயிருந்தபோதிலும் நன்மை பயக்கத்தக்கதாக வேறு ஏதாவது யோசியுங்கள். ஏன் அப்படிச் சொல்லுகிறேனென்றால் பற்றுதலுள்ளவர்களின் யோசனையைக்காட்டிலும் நியாயாநியாயங்களைச்சீர் தூக்கிப் பார்த்துச் சொல்லும் நடுநிலைமை யுள்ளவர்களின் யோசனை சிரேஷ்டமானது” என்றார்.

ராமனுக்கு முடி சூட்டுவதில் தனக்கு அதிகப் பற்றிருப்பதால் தன் யோசனையைக்காட்டிலும் நடுநிலைமையுள்ளவர்களின் யோசனையைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் அபிப்பிராயப்பட்டார். சபையோர்கள் ஏகோபித்து ஆதரித்தபிறகே அதைத் தசரதர் வெளியிட்டார். இதற்கு மாறாக துர்யோசனைக்கு ராமாயணத்திலேயே மற்றொரு உதாரணம் சொல்லலாம். ராமன் சைந்யத்துடன் சமுத்திரக்கரை வந்து சேர்ந்ததையறிந்த ராவணனும் ஒரு ஆலோசனை சபையைக்கூட்டி சபையோர்களை ஸ்தோத்திரம்செய்துவிட்டு பின் வருமாறு சொல்லி ஆலோசனை கேட்டான்:—“சீதையை விட்டுவிடக்கூடாது. தசரதர் பிள்ளைகளையும் கொன்றுவிடவேண்டும். இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு நீங்கள் நன்றாய் யோசித்துச் சொல்லுங்கள்” என்றான். கும்பகர்ணன்கூட சீதையை அபகரித்தபோது யோசனை செய்திருந்தால் உசிதமாயிருந்திருக்கும், எவன் முன் செய்யவேண்டியவைகளைப்பிந்தியும் பின் செய்யவேண்டியவைகளை முந்தியும் செய்ய விரும்புகிறானோ அவனுக்கு நியாநியாயம் விளங்காது” என்றான். ராவணனுக்குக்கோபம் வந்துவிட்டது. விபீஷணரும் “சீதையை ராமனிடம் ஒப்புவிப்பதைத் தவிர வேறு வழியில்லை” என்றார். அவர் பஹிஷ்கரிக்கப்பட்டார். இவைகளையெல்லாம் சொல்லியது எதற்காகவெனில் புராதன இந்தியாவில் ராஜ்ய காரியங்கள் எப்படி நடந்து வந்ததென்பதைக்கொஞ்சமாவது அறிந்துகொள்வதற்காகவே யன்றி வேறல்ல.

## தற்காலப் பஞ்சாயத்தின் வரலாறு.

கிராமங்களில் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தவேண்டுமென்று வெகுகாலமாய் முறையிடப்பட்டு வந்தது. 1860-ஞுத்திலேயே சென்னை ஸ்பெஷல் அஸிஸ்டண்டு இனாம் கமிஷனராயிருந்த திவான் வி. ரங்காச்சார்லுவால் இதற்கென்று ஒரு மெமோராண்டம் தயார் செய்யப்பட்டு இனாம் கமிஷனர் மிஸ்டர் ஜி. என். டெய்லர் என்பவரும் அதை ஒப்புக்கொண்டார். அப்பொழுதே அவர்கள் கிராமப் பஞ்சாயத்தார்களை ஒரு குறிப்பிட்ட அந்தஸ்துக்கு மேற்பட்ட நிலச்சுவான்தார்கள் 5 அல்லது 7 வருஷங்களுக்கொருதரம் எலக்ட் செய்யப்படவேண்டும் என்று கண்டிருந்தார்கள். பிறகு அடிக்கடி இவ்விஷயத்தை அநேக தலைவர்கள் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்.

கடைசியாக 1889-ஞ்த்தில் ஏற்படுத்திய 1-வது சட்டத்தின் 9வது செக்ஷனில் கிராம முன்சீபும் ஒவ்வொரு கட்சிக்காரராலும் நியமிக்கப்பட்ட இருவரும், ஆக மூவர் சேர்ந்து சிவில் கேசுகளை விசாரிக்க அதிகாரம் கொடுத்திருந்தார்கள். இது விரிவாய் அனுஷ்டிக்கப்படவில்லை. பிறகு 1908-ஞ்த்தில் சென்னை கவர்ன்மெண்டார் மேற்கண்ட மாதிரி கிரிமினல் கேஸ்களுக்கும் செய்யலாமா வென்றும், கி. மேக்களுடைய அதிகாரத்தைச்சற்று அதிகப்படுத்தி 5 ரூபாய்க்குட்பட்ட திருட்டுக்களை விசாரித்து 5 ரூபாய்வரை அபராதம் போடுமதிகாரம் கொடுக்கலாமாவென்றும் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுக்களை ஆலோசனை கேட்டார்கள். அதன் முடிவு தெரியவில்லை. பிறகு 1917-ஞ்த்தில் சென்னை கவர்ன்மெண்டார் வெளிப்படுத்திய ஒரு பில்லில் பஞ்சாயத்து மெம்பர்களை ஜனங்களின் விருப்பத்தைக் கூடியமட்டில் அனுசரித்து கலெக்டர் நியமிக்கவேண்டுமென்றும் மெம்பர்கள் காலத்துக்கு எல்லையில்லாமலும் இன்னும் சில ஆட்சேபிக்கத்தக்க அம்சங்களுமிருந்தன. கடைசியில் 1920-ஞ்த்தில் மேற்கண்ட ஆஷேபணைகளை விலக்கி சட்டசபையில் உருவான சட்டம் பாஸாகி அங்கங்கு கோர்ட்டுகளும் ஏற்பட்டு நடந்து வருகின்றன. அதே வருஷத்தில் கிராம சுகாதாரத்தைக் கவனிப்பதற்கு மற்றொரு பஞ்சாயத்து சட்டமும் பாஸ் செய்யப்பட்டது ஆனால் இப்பஞ்சாயத்துக்கள், கோர்ட்டுகளைப்போல் அவ்வளவு அதிகமாய் ஏற்படவில்லை.

## பஞ்சாயத்து கோர்ட்டுகள்.

இக்கோர்ட்டுகள் மட்டில் அங்கங்கு ஏற்படுத்தப் பட்டனவே யொழிய அவை ஒழுங்காய் நடத்தேறுவதற்குப் போதுமான சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படவில்லை. ஏறக்குறைய ஸ்டேட்மெண்டுகளையும் ரெஜிஸ்டர்களையும் ஏற்படுத்திவிட்டு அவைகளை ஒழுங்காய் வைத்துக்கொள்ள சிப்பந்தி கிடையாது. வெகு காலம்வரை பாரங்களும் காகிதங்களும் கூட சப்ளை செய்யப்படாமலிருந்து சமீபத்தில் கிரிமினல் நடவடிக்கை சம்பந்தமான ரெஜிஸ்டர்களும் பாரங்களும் மட்டில் சப்ளை செய்யப்பட்டு இருக்கின்றன. ...வில் நடவடிக்கைகளைப்பற்றி கேள்வி முறை யில்லை. ...ஞ்சாயத்து கோர்ட்டு டிக்கிரிகளை நிறைவேற்றி வசூல் ...சய்ய சட்டத்தில் செக்ஷன்களை ஏற்படுத்தி பஞ்சா...த்து கோர்ட்டுக்கே எல்லா அதிகாரங்களும் கொடுக்...பட்டுவிட்டதாய்ச்சொல்லப்படுகின்றது. டிக்கிரிகளை ...றைவேற்றினால் யார் போய் ஜப்தி செய்வது என்பதுபற்றி சட்டத்திலாவது விதிகளிலாவது ஒன்றும் ...சொல்லப்படவில்லை. பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்டே நேரில் ஜப்தி செய்வதென்றால் அது மிகவும் விரும்பத்தகாதது. பஞ்சாயத்துக் கோர்ட்டில் பிராது செய்வதால் கட்சிக்காரர்களுக்கு ஒன்றும் நஷ்டமில்லையாதலால் நியாயமாய்ப் பிராதைச்செய்யவேண்டுமென்று வாதியும் கவலை கொள்ளுவதில்லை. பிராது செய்வதற்குமுன் பணத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்று பிரதிவாதியும் நினைப்பதில்லை. ரெகுலர் கோர்ட்டுகளில் கோர்ட்டு பீஸையும் மற்றும் செலவுகளையும் ஏறக்குறைய உயர்த்திவிட்டதால் பிராதுத் தொகைக்குச் சமமாக செலவுக்குப் பணமும் போதுமான அவகாசமுமில்லாதவன் ரெகுலர் கோர்ட்டுகளுக்கும் போக முடிவதில்லை. பஞ்சாயத்து கோர்ட்டு டிக்கிரிகளை நிறைவேற்றி வசூல் செய்ய அவைகளுக்கே அதிகாரம் என்று சட்டத்தில் எழுதிவிட்டு எழுதியதை காரியத்தில் அனுஷ்டிக்க வகை செய்யாவிடில் கோர்ட்டுகளினால் என்ன பிரயோசனம்? அதன் டிக்கிரிகளிலும் உத்தரவுகளிலும் ஜனங்களுக்கு எப்படி மதிப்பு ஏற்படும்? பஞ்சாயத்துக் கோர்ட்டுகளிடம் ஜனங்களுக்கு நன்மதிப்புண்டாக வேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்கும் மேலுத்தியோகஸ்தர்களுக்கும் எண்ணமிருந்தபோதிலும், கீழ் உத்தியோகஸ்தர்களும் மாஜிஸ்ட்ரேட்டுகளும் நடத்தும் நடவடிக்கைகளினால் இவைகளிடம் ஜனங்களுக்கு மதிப்புண்டாகக் கூடியதாயில்லை.

சட்டமும் விதிகளுமொரு விதமிருக்க இவர்கள் ஒருவிதம் உத்தரவு போடுகிறார்கள் அதை எடுத்துக் காட்டினால் அவர்களுக்கு மதிப்புக் குறைவாகத் தோன்றுகிறது. பதிலும் சரிவரத் தெரிவிப்பதில்லை. அனாவசியமாகக் கலெக்டரவர்களுக்கும் தாசில்தாரவர்களுக்கும் ரிபோர்ட்டுகள் அனுப்பக்கூடாது என்று சுற்றுத்தரவு போடுகிறார்கள். பஞ்சாயத்துக் கோர்ட்டு மெம்பர்களின்மேல் ஏதாவது அநாமதேயப்புகார் வந்தால் அதை அதிகார தோரணையில் விசாரிப்பது தங்களுக்கு பெருமை யென்று கருதுகிறார்கள். இதனால் தோல்வையடைந்த கட்சிக்காரர்களுக்கும் விஷமிகளுக்கும் இடமுண்டுபண்ணப்படுகிறது.

இப்போதைய நிலைமையில் பஞ்சாயத்துக் கோர்ட்டை ஒழுங்காய் நடத்தவேண்டுமென்று ஒரு பிரசிடெண்டு விரும்பினால் அடுத்துள்ள மேல் உத்தியோகஸ்தர்களுடையவும் கிராம முன்சீப் வெட்டி இவர்களுடையவும் தயவை முதலில் சம்பாதித்துக்கொண்டாக வேண்டியிருக்கிறது. இதனாலேயே கண்ணிய முள்ளவர்களுக்குப்பஞ்சாயத்தில் கலந்துகொள்ளவேண்

டுமென்ற விருப்பம் குறைந்து வருகிறது. இவைகளை யெல்லாம் இங்கெழுதியது பஞ்சாயத்துக் கோர்ட்டுக் கள் கண்ணியமாய் விருத்தியடைய வேண்டுமென்ற விருப்பத்துடனே யல்லாது, இவ்வதிகாரிகளின்மேல் புகார் செய்யவேண்டுமென்ற எண்ணமல்ல. இவைகளை எல்லாமறிந்துநிவர்த்திக்க வழி தேடினாலொழிய பஞ்சாயத்துக் கோர்ட்டுகளின் வளர்ச்சி செழிப்பாயிராது. அவை உபயோகமில்லையென்ற பெயர் கூட வந்துவிடும். அவைகளில் செய்யவேண்டிய திருத்தங்களை உள்ளபடி அறிந்துகொள்ளவேண்டுமானால் அதில் நேரிலனுபவமுள்ளவர்களை ஆலோசிக்கவேண்டும். அப்படிச்செய்யாமல்

### புதிய சட்டம்

ஒன்றை பிரதம மந்திரி கொண்டுவரப் போவதாக பத்திரிகைகளில் பிரசுரமாகி யிருக்கிறது. அவசியமுள்ள திருத்தங்கள் ஒன்றையும் அதில் காணவில்லை. அதற்குப் பதிலாக சிலவிபரீதங்கள் காணப்படுகின்றன. நீதி நிர்வாக அதிகாரங்களைப் பிரிக்கவேண்டு மென்று வெகு காலமாக முறையிட்டு அத்தத்துவத்தை கவர்ன்மெண்டாரும் ஒப்புக்கொண்டு 'கோல்ரிட்ஜ்' கமிட்டியை ஏற்படுத்தி அதன் சிபார்சுகளில் தகரார் செய்து கொண்டிருக்கும் சமயத்தில், அஸ்திவாரத்தில் தனித்தனியாயிருந்த நீதிநிர்வாகப் பஞ்சாயத்துகளை ஒன்று சேர்க்க எத்தனிக்கப்பட்டிருக்கிறது. முதலில் பஞ்சாயத்து கோர்ட்டு பில்லில் கிரம முன்சீப்கள் உத்தியோகமுறைமையில் பஞ்சாயத்துமெம்பர்களென்றிருந்ததை சட்டசபையார் எடுத்துவிட்டார்கள். இப்புதிய பில்லில் அவர்கள் உத்தியோக முறைமையில் மெம்பர்கள் என்று மறுபடி சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது நடந்துவரும் நிலைமைக்கு அவர்களை உத்யோக முறையில் பிரசிடெண்டு என்று சேர்த்தாலும் பாதகமில்லை. நிர்வாகப் பஞ்சாயத்து சபைகள் அதிகம் ஏற்படாததைக் கருதி அவை விருத்தியடைய இதை ஒரு யுக்தியாக அதற்காகவென் றேற்படுத்தப் பட்டிருக்கும் தனி ரெஜிஸ்டிரார் ஜெனரல் கருதியிருக்கலா மென்றாலும் அவைகளை விருத்திசெய்ய இது நல்ல வழியில்லை. அப்பஞ்சாயத்துக்கள் முதலில் குறைவாக விருந்தாலும் சரிவர நடக்கும்படி செய்து ஜனங்களுக்கு அதில் தானாகவே விருப்பமுண்டாகும்படிச் செய்வதுதான் நல்லது.

## செய்யவேண்டிய திருத்தங்கள்.

பஞ்சாயத்து சபைகளும் கோர்ட்டுகளும் வெவ்வேறாகத் தானிருக்கவேண்டும். நிர்வாக பஞ்சாயத்து சபை மெம்பர்கள் கிராமங்களில் செய்யவேண்டிய வேலைகளில் பற்றும் ஊக்கமும் உள்ளவர்களாகி வரி போடவும் வசூல் செய்யவும் வேண்டியவர்கள் கோர்ட்டுகளில் ஸ்தானம் வகிப்பவர்களோ நடுநிலைமை யுள்ளவர்களாயிருக்கவேண்டும். நிர்வாக பஞ்சாயத்து சபை ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொன்றிருக்க வேண்டும். கோர்ட்டுகளோ ஒவ்வொரு கிராமத்துக்கும் தனித்தனியா யிருப்பது அவ்வளவு நல்லதல்ல. சில கிராமங்களைச் சேர்த்து ஏற்படுத்தினால்தான் கிராமக் கட்சிகளும் விருப்பு வெறுப்புகளும் தலை காட்டாமலிருக்கும். அவை தலைகாட்டும்போது அயல் கிராமத்து பிரதிநிதிகள் அதைக் குறைக்கவும் சமாதானப்படுத்தவும் உதவுவார்கள். மேலும் கோர்ட்டுகளிடத்தில் ஜனங்களுக்கு மதிப்பு ஏற்படும்படி செய்ய கோர்ட்டு டிக்கிரிகளும் உத்தரவுகளும் வெறுங்காகிதங்களென்று தோற்றாமல் அவைகளை நிறைவேற்றவும் கோர்ட்டுகள் அவமதிக்கப் படாமல் காப்பாற்றவும் போதுமான சிப்பந்திகளும் காபந்துகளும் வேண்டும். கீழ்தர உத்தியோகஸ்தர்களும் மாஜிஸ்ட்ரேட்டுகளும் இவைகளில் எவ்விதத்திலும் குறுக்கிட இடமிருக்கக்கூடாது. இவைகளை மேற்கோளாகக்கொண்டு இப்போதைய சட்டத்திலும் நடவடிக்கைகளிலும் அநேக திருத்தங்கள் செய்யவேண்டியிருக்கின்றன. பஞ்சாயத்து கோர்ட்டு தீர்ப்புகளின்மேல் அப்பீல் அதிகாரமுள்ள ஒரு தாலூக்காவுக்கு ஒன்று அல்லது இரண்டு மத்தியஸ்த பஞ்சாயத்து கோர்ட்டுகள் இருப்பது உசிதமாயிருக்கும். இவைகளை யறிந்து செய்வதற்குப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளில் அனுபவமுள்ளவர்களைக் கூட்டி யோசனை செய்ய வேண்டியதுதான் கிரமம்.

---

## கண்ணம்பாடி ஒப்பந்தம்.

கண்ணம்பாடித் தகராறு விஷயமாகச் சென்னை கவர்ன்மெண்டாரும் மைசூர் கவர்ன்மெண்டாரும் செய்துகொண்டிருக்கும் ஒப்பந்தங்களின் விவரங்களை வெளியிடும்படி உத்தரவாகி விட்டதாக அறிகிறோம். சென்னை கவர்ன்மெண்டின் சார்பாக லார்டு வில்லிங்டன், கனம் வி. பி. ராமசுவாமி அய்யர், மிஸ்டர் பீ. ஹாக்கின்ஸ் இவர்களும் மைசூர் கவர்ன்மெண்டின் சார்பாக மைசூர் மகாராஜா திவான் இவர்களும் உடம்படிக்கையில் கையொப்பமிட் டிருக்கிறார்கள். உடம்படிக்கை 4, 5 பாகங்கள் கொண்டதாக இருக்கிறது. காவிரியின் ஜலப் பிரிவினை விஷயமான சில புள்ளிக் கணக்குகள் அட்டவணையாகச் சேர்க்கப்பட்டிருக்கின் றன. 1892-௵த்தில் ஏற்பட்ட இந்தத் த இந்த உடம்படிக்கையின் மூலமாகத் தீர்க்கவி

223462



# கூட்டுறவாளர்க்கேற்ற சில துறை.

(கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் வை. சா. வேங்கடராம ஐயர்,)

கனந்தங்கிய சபைத்தலைவர் அவர்களே!
சபை வீற்றிருக்கும் கனவான்களே!!
கூட்டுறவுச் சகோதரர்களே!!!

ஸ்ரீமத் இராமாயணம் படிக்கப்படும் இடங்களிலே முன்னர் இருக்கும் வழக்கம் வாய்ந்த ஸ்ரீ ஆஞ்சநேயர் போலக் கூட்டுறவாளர் கூடிப்பேசும் இடங்களில் முன்னர் இருக்கும் வழக்கம்கொண்ட அடியேற்கு அதிர்ஷ்டவசத்தால இன்று உங்கள் முன் நின்று சில கூறத்தக்க வசதிகிடைத்தது. அதுபற்றி அடியேன் பெருமகிழ்வெய்துகிறேன்.

கூட்டுறவு முறையைப் பின்பற்றி உழைத்து வரும் பெருமைவாய்ந்த உங்களுக்கு ஒன்றற்கும் பற்றாத அடியேன் அம்முறையைப்பற்றிக் கூறுவது மகாபண்டிதர்க்குச் சிறவனொருவன் "பால் வெண்ணிறமாயிருக்கும்; சர்க்கரைதித்திக்கும்" என்று கூறுவதுபோலாமே அன்றிப் புதுவதாயிருக்கமுடியாது. எனினும், உத்தரவை மறுத்தற்கு அஞ்சிக் கடமையை உணர்ந்து சிறிதுகூறுவேன். வெறுப்பனவிலக்கி, உவப்பன உளங்கொளல் உடன்பிறப்பாளர்களாகிய உங்கள் கடன்மையாம்.

இத்தலைத்தொடர் "பண்டப்பிரிவினை, கொடுக்கல் வாங்கல், விடமைத்துதவல், உழவினர்க்குதவல், தொழிலினர்க்குதவல், மொத்தக் கொள்வினை, மத்தியசங்கம், மேற்பார்வை பார்த்தல், வினைநிலமாக்கல், வித்தைபயிற்றல். விரித்துரையாடல், உலகொருங்கமைத்தல்" என்ற பலபிரிவுகளாகவகுத்துக் கூறப்படலாம். அடியேனும் இன்று அம்முறையிற் சிறிதுகூறுவேன்.

## முன்னுரை.

உலகிலே மக்களாய்ப் பிறந்தார் ஒவ்வொருவரும் இம்மையில் உண்டு, உடுத்து, உறைந்து, உபகாரியாயிருந்து; மறுமையில் ஆண்டவன் திருவருளுக்கு உரியராகவே தோன்றியிருத்தல் வேண்டும். அங்ஙனம் ஆதற்கு முதல் துணையாவது உடலே. "சுவரை வைத்துக்கொண்டல்லவா சித்திரம் வரைதல்வேண்டும்?" என்ற ஒருபழமொழியும் இருக்கின்றது. இதிற்பயின்று வரும் சுவர் என்பது மக்களது உடலைக்குறிப்பதாம்; சித்திரம்என்பது உலக நன்மையைக்குறிப்பதாம்; வரைதல் என்பது தொண்டுபுரிதலைக் குறிப்பதாம். இப்பொருளால் "உலகினர்க்குத் தொண்டுபுரியவே மக்களாவார் ஒவ்வொருவர்க்கும் ஆண்டவனால் உடல்தரப்பட்டது" என்பது புலனும். "அறஞ்செயத் துணைபுரிதற்கே உடல் இருப்பது" என்று பொருள்படும் வடமொழித் தொடரும் இங்கேகவனிக்கத்தக்கது. இத்துணைப் பெருமைவாய்ந்த உடல் சோற்றால் நிலைபெறுவது. "சோற்றால் எடுத்தசுவர்" எனவரும் பழமொழியையும் நோக்குக. "உண்டிமுதற்றே உடலின் பிண்டம்" என்றும், "பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்-நாழி அரிசிக்கே நாம்" என்றும் வருவனவும் அது.

## பண்டப்பிரிவினை.

இத்தகைப் பெருந்துணையான உணவினைப் பெறுவது எல்லார்க்கும் எளியதொன்றன்று. எக்காரணம் கொண்டோ ஒருவர்கையைப்பலர்பார்க்க வேண்டிய நிலைமையிலேயேதற்காலம் உலகப் போக்குச் சென்றுகொண்டுவருகிறது. இந்நிலையில், சிற்சில இடங்களில் "வயிறு நிறைய உண்பதிலும், அரைநிறைய உடுப்பதிலுமாவது ஒவ்வொருவருக்கும் சுயேச்சை இருக்கவேண்டும்" என்ற ஆராய்ச்சி பிறக்கலாயிற்று. அந்த ஆராய்ச்சியின் பயனாக ஆங்காங்கு ஒருமனப்பட்டபலர் ஒன்றுகூடித் தங்களுக்கு வேண்டிய பண்டங்களை மொத்தமாக முன்பணம் கொடுத்து வாங்கிச் சில

*இது, கும்பகோணத்தில் (20—4—24) நடைபெற்றகூட்டுறவாளர் நாளன்றுபடிக்கப்பட்டது.

லறையாக முன் பணங்கொடுத்துப் பிரித்துக்கொள்வதை நல்லதொரு துறையாகக்கைக்கொள்ளலாயினர். இம்முறை இலகுவில் நிறைவேற்றக்கூடியதுபோலக் காணப்படினும் இஃது அத்துணை இலகுவில் நிறைவேற்றக் கூடியதொன்றன்றென்பதையும், இதற்குப்பல உட்பகைகளும் வெளிப் பகைவர்களும் உண்டு என்பதையும், ஆனால் உலகவிடுதலைக்குக் கடைபோகத் துணைசெய்யக்கூடியது இஃதொன்றே என்பதையும் கூட்டுறவாளர் மறத்தல் கூடாது.

இதற்குப் பகையாக முதலிற் கூறத்தகுந்தது இம்முறையில் நம்பிக்கைவைத்துச் சேர்ந்தவர்களிடத்திற் சேர்ந்து பண்டம் வாங்க மனம் இருந்தும்-முன்பணம் கொடுக்கக் கையிற்பணமில்லாமையே. இதுவே பெரியதோர் உட்பகைமையாம். ஏனையபகைவர்களைப்பற்றிக் கூறவேண்டிய இடம் இஃதன்று. ஆதலின், இவ்வியக்கம் வளர வேண்டுமானால் இம்முதற் பகைமைக்குத் தப்பி உறுதியாய் நம்பிக்கையுடன் தொடக்கத்திலேயே பெரும்பயன்களை எதிர்பாராமல் பொறுமையுடன் விடாது போற்றிவரல்வேண்டும்.

இங்ஙனம் வருங்கால் சேர்ந்தோர் எவரும் "எனக்கு எவ்வளவுமிகுதி; எனக்கு எவ்வளவு மிகுதி" என்று கணக்குப்பார்த்துக் கைப்பற்ற முயலலாகாது. அது மண்ணில் ஒரு விதையைப் புதைத்து அது முளைத்து வெளிவந்ததும் "எவ்வளவு வேர் விழுந்திருக்கின்றது; எவ்வளவுவேர் விழுந்திருக்கின்றது" என்று அடிக்கடிபிடுங்கிப் பார்க்கும் பைத்தியக்காரர் செயல்போலாம். இத்தகையினர் "நம்மால் வேற்றிடங்களில் வாங்கப்படும், பண்டங்களுக்கு அவற்றின் சொந்தக்காரர் நமக்கென ஏதேனும் 'மிகுதி' என்று சொல்லிக் கொடுக்கின்றனரா? இல்லையே. அவரது கணக்கைத்தான் பார்க்கமுடியுமா? முடியாதே. அங்ஙனமிருக்க இங்கேமாத்திரம் ஏன் இப்படி அவசரப்படல்வேண்டும்? இங்கே நமக்கென நமதுபெயரால் 'இவ்வளவு மிகுதி' எனக் கணக்குவைத்திருக்கிறார்களே; கணக்குகளைத்தடையில்லாமற் பார்க்கத்தக்க வசதியுமிருக்கின்றதே. அவைபோதாவோ? "வந்ததெல்லாம் கொள்ளும் ஆனாரக் கப்பல் என்பதுபோல எவ்வளவு வந்தாலும் தான் நமது குடும்பக்கப்பல் விழுங்கிவிடுகின்றதே! இத்துறையிலாவது நம்மை அறியாமற் சிறிது மிகுந்துவரலாகாதா?" என்று ஆராய்ந்தறிந்து "எல்லார்க்கும் ஒருவர்; ஒருவர்க்கெல்லாரும்" என்ற மகாமந்திரத்தைத் துணைக்கொண்டு நடைபெறுகின்றமையின் இம்முறை "நாமறியாமலே நமக்கு முதலாக்கும்" என்ற நம்பிக்கையுடன் நடந்துகொள்ளல்வேண்டும்.

இனிச்சிலர், இம்முறையில் எங்கேனும் சிறிது தவறுதல் நடந்துவிடினும், உடனே அன்னார் இம்முறையிற்சேர்ந்தவராயிருப்பின் "இதிற் சேர்ந்தால் ஏதேதோ நன்மைவந்துவிடும் என்று வாய்ப்பந்தர்ப்போட்டார்கள்; ஒருநன்மையையுங் காணேம்" என்றும், சேராதவராயிருப்பின் "இது தவறான மனிதரால் நடத்தப்படுகிறது: அதனால்தான் இக்குறைபாடுகள் தோன்றுகின்றன" என்றும் கூறிப் புறம் பழிக்கின்றனர். இத்தகைப்பெரியார் சிறிது தயைசெய்து, சேர்ந்தவராயிருப்பின் "இக்குறை நம்மால் நம்பப்பட்டவரது செயலால் நேர்ந்ததாகக் கருதப்படுகிறது; 'தெளிந்தான்கண் ஐயுறவு தீரா இடும்பைதரும்' என்பது மறைமொழி; ஆதலின், நாம் நடத்திப் பார்ப்போம்" என்று கருதி நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டும்; சேராதவராயிருப்பின் "இம்முறை நமது நாட்டவரால் தொடங்கப்பட்டது; இதில் வரும் பெருமை சிறுமைகளில் நமக்கும் பங்குண்டு; 'அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின் கண்-அல்லல் உழப்பதாம் நட்பு' என்பது பெரியார்வாக்கு. ஆதலின் நாம்சேர்ந்து இயன்ற அளவு இனிது நடத்தமுயலுவோம்" என்றுகருதி உடனேசேர்ந்தும் தக்கவாறு திருத்தித் தங்களுக்கும், நாட்டிற்கும் நன்மையைச் செய்யமுயலுவதே உரிமையும், கடமையுமாகும். அங்ஙனமின்றேல், அது 'கட்டிய வீட்டிற்குப்பழுது கூறும் கடுமொழியாளர் செயலேயாம்' என அறிவுடையோரால் ஒதுக்கப்படுவதாம். "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய

வண்ணம் செயல்" என்பது வள்ளுவர்வாய் மொழி. "ஆயிரம் கோவிந்தம் போடலாம்; ஒரு நாதனுக்கிடல் கஷ்டமாம்" என்பது பழமொழி.

இவ்வளவு இடையூறுகளுக்கும் உட்பட்டு இம்முறையிற் கலந்துகொள்வதென்றே வைத்துக்கொள்வோம். அக்கால், அதிற்சேர்தற்குரியரோவார் யாவர்? சேர்வதால் வரும்பயன்யாது? என்று கேட்கப்படலாம். அதற்கெனவிடையிறுக்க அடியேன் அதிகம் வருந்தவேண்டியதில்லை. உலகில் எவரும் உண்ணுமலும், உடுக்காமலும் இருத்தல் முடியாது. நமது தொழில் முறையோ அவ்விரண்டிற்கும் வேண்டியபண்டங்களைப்பகிர்ந்துகொள்வதே. ஆகவே, உண்ணலும், உடுத்தலும் செய்கின்ற ஆண் பெண் என்ற அனைவரும் அங்கத்தினராதற்கு உரியவரே. உலகினர்க்குச் "சங்கம் செய்வதைத் தங்கம் செய்யாது" என்ற ஒரு பழமொழி உண்டு. இத்தகைய தங்கத்தினும் மேம்பட்ட சங்கத்தின்பயனை அனுபவிக்காதவர் 'வாங்குவோர்' என்றதகுதியிலுள்ள நாமே. பொருளாதாரத்தால் நிலச்சுவான்தார் சங்கம், முதலாளிகள் சங்கம், தொழிலாளிகள் சங்கம் என்பன கேட்கப்படுகின்றன. நிலங்கிழவர்களது நிலத்தாலும், முதலாளிகளின் முதலாலும், தொழிலாளிகளின் தொழிலாலும் உண்டு பண்ணப்படும் பொருள்களுக்குப் பொன்னைக் கொட்டிக்கொடுக்கும் வாங்குவோராகிய நமக்கு ஒரு சங்கம் வேண்டாமா? இன்னும் நாம் ஒரு சங்கமாகச் சேராமல் நம்மை அந்தப் பொருளாதாரத்தின் "மறந்துபோன அதிகாரத்திற்கு உரியவர்" என்ற இழிந்த நிலைமையில் வைத்துக்கொள்ளலாமா? ஊன்றிநோக்குவார்க்கு வாங்குவோராகிய நம்மவராலேயே அம்முதற்றத்தினர்க்கும் பெரும்பயன் விளைகின்றது என்பதும், வாங்குவோர் என்ற நிலைமையில் நீங்கி எவரும் இருத்தல் முடியாது என்பதும் இனிதுபுலனும். இங்கே இவற்றிற்கு மேற்கோளாக

> உலகம் இன்புறுதற் கு றுதுணை யாவது
> நிலக்கிழ வர்தம் நிலனும் அன்றே
> முதலா ளிகள்தரு முதலும் அன்றே
> தொழிலா ளிகள்செய் தொழிலும் அன்றே
> மற்றென்னுவெனின் மனைக்கு வேண்டும்
> சரக்குக் கேன்றே தங்கர் தம்மைக்
> கோர்த்து விலைக்குக் கொள்ளும் நிலையினில்
> உள்ளநம் போன்றோர் உறுதியே யாதும்."

என்ற பாடற்பகுதிகளைக்கூறவதே போதியதாம். அன்றியும், தரகர் முதலிய இடைக்கொள்ளைகளால் வரும் தீமையினின்றும் விலக இம்முறை தக்கதொரு சாதனமாகும் என்பதும் தவறுகாது.

## கொடுக்கல் வாங்கல்.

இத்தகைப் பெரும்பயன்தரும் நன்முறையைக் கைக்கொண்டு இன்புறுதற்கு முதற்பகைமையாவது "அங்கத்தினர்களிடம் முன்பணம் கொடுத்துவாங்குதற்குத் தக்க பொருள் வசதி இல்லாமையே" என்பதுமுன்னர்க்கூறப்பட்டது. அஃது உட்பகையாம் என்பதும் அறிந்ததே. இத்தகைய பகைமைக்குத் தப்பவேண்டியது இன்றியமையாததொன்றே. இத்தொல்லையினின்றும் நீங்கும்பொருட்டுத் தான் 'கொடுக்கல் வாங்கல்சங்கங்கள்' நிலையிடப்படுகின்றன. இந்தக் கொடுக்கல் வாங்கல் சங்கங்களின் தந்தை எனத் தகும் ரைபீஸன் துரைமகனர் செய்ததும் இம்முறைதான். அவர் கண்டமுறையையும், அம்முறையிற் சிறிது மாறுதலுடன் நடைபெறும் ஷுல்ஸ் டெலிட்ஸ் என்பார் கண்டமுறையையும் பின்பற்றித்தான் நமது நாட்டிற் கிராமச்சங்கங்களும், நகரச்சங்கங்களும் நடைபெறுவதாகச் சொல்லப்படுகின்றன. ஆனல், நமது நாட்டு நடைமுறை அடிப்படையான தத்துவங்களிலேயே பெரிதும் மாறுதல் அடைந்திருக்கின்றது கவனிக்கப்படவில்லை.

அங்கே இத்தகைய சங்கங்கள் "மிகுத்து வைக்கவும், கடன்கொடுக்கவும் உள்ள சங்கங்கள்" என்ற பெயருடன், பெயருக்கேற்ப அடிப்படையான தத்துவங்களில் தவறுது நடைபெறுகின்றன. இங்கே "கடன் கொடுக்கும் சங்கங்கள்" என்ற பெயருடன் அப்பெயருக்கேற்பவே நடைபெற்றுவருகின்றன. அங்கே ஒவ்வொரு அங்கத்தினர்பேரிலும் 'எவ்வளவு மிகுத்துவைக்கப்பட்டிருக்கின்றது' என்று கவனித்து அதற்குத்தக்கவாறு தேவையானவற்றிற்கு மாத்திரம் கடனுக்

அளிக்கப்படுகிறது. இங்கே 'குறிப்பிட்டுச்சொல்ல மனம்வாரா' முறைமையில் பெரும்பாலான கடன்கள் கொடுக்கப்படுகின்றன. அங்கே "சென்றவருஷத்தைக் காட்டிலும் இந்த வருஷத்தில் இவ்வளவு அங்கத்தினர் பேரால் இவ்வளவு தொகை அதிகம் மிகுதியாக ஏற்பட்டிருக்கிறது" என்ற அறிக்கை விசேஷமாகக்கருதப்படுகின்றது. இங்கே "சென்றவருஷத்தைக் காட்டிலும் இந்த வருஷம் இவ்வளவு அங்கத்தினர்களுக்கு இவ்வளவுதொகை அதிகமாக மத்தியசங்கத்திலிருந்து கடன்வாங்கிக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்ற அறிக்கை விசேஷமாகக்கருதப்படுகின்றது. அங்கே ஒரு பைசா முதல் மிகுத்துதவுவதற்கு வேண்டிய வசதிகள் மூலாதாரச் சங்கங்களுக்கு இருக்கின்றன. இங்கே மூலாதாரச்சங்கங்களுக்கு அத்தகையவசதிகள் தாராளமாய் உபயோகப் படுத்தக்கூடிய நிலைமையில் இல்லை.

சில இடங்களில் அங்கத்தினர்களுக்கு உபகாரமாயிருக்கும் பொருட்டுப் பின்னுதவிச்சேமநிதி ஒன்று சேர்க்கத்தொடங்கினால் அம்முறை மத்தியசங்கங்களாற் செய்யப்படுகின்றது. இது "மருமகனோடு இன்புற்று மகிழ்ந்திருக்கும் மகளது நிலைமையைக்கண்டு பொறாமைப்பட்டுப் போட்டிபோடும் தாயின் செயலுக்கு ஒப்பானது" என்று அறிவுடையோராற்கருதப்படும் என்பது பிழையாகுமா? எந்த நன்மையும் ஏழை மக்களிடமிருந்தேதொடங்கப்படவேண்டியது நியாயமும், பெரியோர்களது கடமையுமாதலின் பிழையாகாதென்க.

இக்கூறியவற்றால், நமது நாட்டிலே முதலிற் கிராமந்தோறும் "மிகுத்து வைக்கவும், கடன் கொடுக்கவும்" என்றதலைப்பெயருடன் சங்கங்கள் தோன்றவேண்டும் என்பதும், அவற்றில் பெயருக்கேற்ப நடபடிக்கைகள் நடந்துவரல் வேண்டும் என்பதும், அவற்றின் நடபடிக்கைகளுக்குத் துணைசெய்வதற் கென்று மத்திய சங்கங்கள் முன் வரவேண்டுமே அன்றிப் போட்டிபோடும் பொருட்டு முன்வரலாகாது என்பதும் இனிதுபுலனாம்.

இங்ஙனம் நடைபெறில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவர்க்கும் தத்தம்பொருளாதாரநிலைமை நன்கு விளங்கும். விளங்கவே, அன்னார் வரவுக்குமிஞ்சிச் செலவு செய்ய இடமுண்டாகாது. வேண்டியபொழுதெல்லாம் கடன் வாங்க வசதியிருப்பின் எத்தகைய அறிஞரும் பிரியப்படிசெலவிடும்பொருட்டுக் கடன் வாங்கவே முந்துவர். யாரேனும் "இங்ஙனம் செய்வது தகாததாயிற்றே" என்று கூறித்தடுத்தால் அன்னார் உடனே, "கடனுண்டு வாழமைகாண்டலினிதே" "கடன் கொண்டவன் கால்மனிதன்" "கடன் காலனுக்குச்சமம்" என்றெல்லாம்தம்மாற் கூறக்கூடிய—'கடன்படல் கூடாது' என்ற கருத்தை வற்புறுத்தக்கூடிய ஆப்த வாக்கியங்கள் அனைத்தையும் மறந்து "கடன்கொண்டும் செய்வனசெய்" என்ற ஆபத் காலவாக்கியத்தைக்கூறித் தமது பொருட்காரச்செயலுக்கு மேற்கோள்காட்டவும் முந்துவர். இஃதுலக அனுபவம். "வளவனாயினும் அளவறிந்தழித்துண்" என்ற ஔவையார் வாக்கும் ஆராயத்தக்கது.

அன்றியும், வரவு செலவுகளை முற்கூட்டி அறிந்து வைத்தோர், அளவுக்குமிஞ்சிச் செலவு செய்ததால் வரும் மானம் அழிதல், மதிகெடல், போனதிசை எல்லார்க்கும் கள்ளராதல், ஏழ்பிறப்பும் தீயராதல், நல்லார்க்கும் பொல்லாராதல் ஆகிய தொல்லைகளுக்குள்ளாகார். மேலும், எதற்கும் கலங்காதவனும், கைலாய மலையையே கலங்கச் செய்தவனும் ஆகிய இலங்கேசன் இராமபாணத்தால் யுத்தகளத்திற் கலங்கியதற்கு உவமையாகக் கவிவல்லோராற் கூறப்படும் கடன் தொல்லைக்கும் அன்னார் உள்ளாக மாட்டார். தகுந்த நிலைமையிருந்தும் கடன்வாய்ப்பட்டுப் பிறருக்கு அடிமையாகும் துக்கத்தைக்காட்டிலும் கொடியதொரு துக்கம் பிறிதொன்றில்லை என்பதை அடியேன் எடுத்துக்கூற வேண்டியதில்லை. இன்னும் இம்முறை வளர வளர நம்மவர்க்குள் வேண்டாத—வெறுக்கத்தக்க—ஆடம்பரமான . அழிசெலவுகளும், தண்டச்செலவுகளும் குறைந்து பொருள் மிகுதற்குற்றவசதி உண்டாகும் என்பதும் ஆராயத்தக்கதாம்.

(தொடரும்)

ருக்கின்றது. இது மிகவும் வருத்தத்தக்கதாக விருக்கின்றது.

சாஸ்திரிகள்:—சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதைத் திருத்துவதற்கு எவரால்முடியும் சாஸ்திரம் திருத்தப்பட்டாலல்லவோ தாங்கள் சொல்லுகிறபடி நடக்கலாம்.

நீசுதர்:—வேதம் ஒன்றுதான் அனாதியானது என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆகையால் சாஸ்திரம் ஒருவரால் ஏற்படுத்தப்பட்டது என்று ஏற்படுகிறது. அவ்விதம் எப்போது எவரால் ஏற்படுத்தப்பட்டது? அதற்குமுன் எவ்விதம் அனுஷ்டிக்கப்பட்டது என்பவைபோன்றவைகளைத் தாங்களே நீர ஆராய்ந்து பார்ப்பீர்களானால், இந்தக்கேழ்விக்கு இடமிருக்காது. சாஸ்திரமென்பது மகான்கள் தோன்றி, அவர்கள்காலத்தில் இருந்த தேசத்தின் நிலைமைக்கும், ஜனங்களின் நிலைமைக்கும் தக்கவாறு அம்மகான்களால் ஏற்படுத்தப்பட்டது மேலும் "சாஸ்திராய சுகாயசா" சௌகரியத்தை (சுகத்தை) உத்தேசித்து சாஸ்திரம் என்று ஆன்றோர் வாக்கிருக்கின்றதே. அப்படிக்கிருக்க தற்காலநிலைமையை உத்தேசித்து சாஸ்திரத்தை ஏன் திருத்தப்படக்கூடாது?

சாஸ்திரிகள்:—அப்படியானால் மகாத்மாகாந்தி சொல்லுகிறபடி தீண்டாமை என்பதையும் ஒழித்துவிட வேண்டியதுதானோ?

நீசுதர்:—அதற்கு என்ன சந்தேகம்? தீண்டத்தகாதவர்கள் எனப்படுவோர்களும் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட நம்மைப்போன்று பஞ்ச அறிவுடையோர்கள்தானே. அவர்களும் நம்மைப்போல் மனுஷிய ஜன்மாதானே.

சாஸ்திரிகள்:—நீர் பேசுவதெல்லாம் வெகு அழகாகவிருக்கிறது. சுருதி, ஸ்மிருதி, இதிஹாஸ புராணங்களையெல்லாம் அக்கினி பகவானுக்குத் தத்தம் செய்துவிட வேண்டியதுதான் போலிருக்கிறது.

நீசுதர்:—தாங்கள்சொல்லிய சுருதி, ஸ்மிருதி முதலியவைகளில் வர்ணாச்சிரமம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றதே தவிர்த்து ஐந்து என்று காணப்படவில்லையே!

[illegible]ஸ்திரிகள்:—ஏன் சண்டாளர்களும், நீச்சர்களும் அக்காலத்திலிருந்ததாகப் புராணங்களில் காணப்படவில்லையா?

நீசுதர்:—சுருதியில் நான்கு வர்ணாச்சிரமந்தானே சொல்லப்பட்டிருக்கிறது. அதை ஒப்புக்கொள்ளுகின்றீர்களா? அதன்பிறகு அந்நான்கு வர்ணங்களிலிருந்தும் குண்டகோளர்கள், கோளகுண்டர்கள் முதலிய பல்வேறு ஜாதிவகுப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அதைப்போல் இவர்களும் ஒரு வகுப்பினர்கள். மேலும் நான்கு வருணத்தார்களுக்கும் தனித்தனியே வெவ்வேறு கர்மாக்கள் வகுக்கப்பட்டிருந்தது அவைகளை அவர்கள் நடத்தாமல் விட்டுவிட்டபோதிலும் செய்யத்தகாத காரியங்களையும், தீச்செயல்களையும் செய்தபோதிலும் அவர்களுக்கு நீசத்துவம் உண்டாகிவிடுகின்றது. ஆகையாலவர்கள் சகவாஸத்திற்கு அருகதையற்றவர்கள் என ஒதுக்கிவைக்கப் பட்டார்கள். அப்படிக்கிருக்க அவர்களை ஒரு ஜாதியாகப்பிரித்து வம்ச பாரம்பரியமாக நல்ல நடை, உடை, பாவனையுடையவராகவும், நற்குணமுள்ளவராகவு மிருந்தபோதிலுஞ்சரி, எல்லோரையும் சமூகவாழ்க்கையில் ஒதுக்கித் தள்ளிவிடுவது என்றால் அது எவ்விதம்நியாயமாகும்? நம்முடைய ஜாதியில் செய்யத்தகாத காரியங்களையும், பாபகிருத்தியங்களையும் செய்து வருகின்றவர்களையும் கர்மாக்களை எள்ளளவேனும் நடத்தாமல் விட்டுவிட்டவர்களையும் இன்னும் சொல்லத்தகாத காரியங்களைச் செய்துவருபவர்களையும் நாம்ஒதுக்கித் தள்ளிவிட்டோமா? சாஸ்திரீதியாக இவர்களுக்குச் சண்டாளத்துவம்கூட கல்பிக்கக்கூடியதான காரியங்களை எத்தனையோபேர் நடத்தி வருகின்றார்கள். இவர்களை யெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டோமா? இவர்கள்செய்யும் துஷ்கிருத்தியங்களில் ஈஷத்தேனும் செய்யாதவர்களாயும், பாமரர்களாயுமுள்ள அவர்களைமாத்திரம் ஒதுக்கித் தள்ளுவது ஞாயமாகுமா? இன்னமும் ஐயா! நாம் அவர்களோடுகூட சமபந்திபோஜனம் செய்யவேண்டாம். அவர்கள் வீட்டிற்கு நாம் போகவேண்டாம். நம்முடைய வீட்டிற்கு அவர்களை அழைக்கவேண்டாம்: இதையெல்லாம் ஏன் செய்யவில்லையென்று நம்மை ஒருவரும் கேழ்க்கவாவது, நம்மைக் கட்டுப்படுத்தவாவது முடியாது. ஆனால் அவர்கள் மனம் புண்ணாகும்படி தெருவில் வரக்கூடாது; பள்ளிக்கூடத்திற்கு வரக்கூடாது என்று இம்மாதிரிநிர்ப்பந்திப்பது அழகாகுமா? கேவலம் மிருகஜாதிகளுக்குள்நிகிருஷ்டமானதுசுவான (நாய்) ஜென்மாவென்று பெரியோர்கள் சொல்லுகின்றார்களே. அவ்விதமான நாயை யெடுத்து

மடியில் வைத்துக்கொண்டு முத்தம்கொடுத்து கொஞ்சிக்குலாவுவதும், சமையலறையில் கொண்டு வைத்துக்கொள்வதும் சகஜமாகவும், பெருமையாகவும் கருதப்படுவதும் இதர மதஸ்தர்களை அடுப்பங்கரைவரையில் அழைத்து உபசரிக்கப்படுவதுமான இக்காலத்தில்,நம்முடைய ஹிந்துமதத்தைத் தழுவி நிற்கின்றவர்களாகிய அவர்களைமாத்திரம் தீண்டத்தகாதவர் என்று கேவலம் நாற்கால்ஜந்துக்கள்கூட தங்குதடையின்றி தாராளமாகப் போகக்கூடிய தெருவின்வழியே போகக்கூடாதென்றால் எவ்விதம் ஞாயமாகும்? கொஞ்சம் பொறுமையுடன் ராகத்துவேஷாதிகளுக்கு வசப்படாமல் பரியாலோசனைசெய்து பார்த்தால் இதன் உண்மைதானாகவே தோன்றும்

சாஸ்திரிகள்:—ஆனால் நம்முடைய முன்னோர்களெல்லோரும் முட்டாள்களா? அவர்கள் நாளில் அம்மாதிரி நடக்கவில்லையா? இப்போது மாத்திரம் ஏற்கனவே நடந்ததற்கு விரோதமாக நடக்கவேண்டுமென்றால் எவ்விதம் சாத்தியப்படும்? சாஸ்திரம் இடம் கொடுக்கவேண்டாமா?

தீக்ஷிதர்:—நம்முடைய முன்னோர்கள் மஹா புத்திமான்கள். அதற்கு என்ன சந்தேகம்? இதர தேசத்தார்கூட நம் முன்னோர்களின் புத்திசாதுர்யத்திற்கு சிலாகிக்கின்றார்களென்றால் நாம் சம்சயப்படவேண்டியதில்லையே. அவர்கள் அந்தகாலத்தின் நிலைமைக்குத் தகுந்தபடி சாஸ்திரங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள் நம் முன்னோர்கள் நடத்திய அக்கினிஹோத்திர வைசுவதேவாதிகளையும், வேதாத்தியயனத்தையும் இப்போது எல்லாப் பிராமணர்களும் நடத்துகின்றார்களா? அக்காலத்தில் வேதபாடசாலைகளிலும், குருகுலவாசத்திலும் பிராமணர்கள் படித்துவந்தார்களே. இக்காலத்தில் இருக்கிற சொத்துக்களை விற்றுவிட்டு, இங்கிலிஷ் படிக்கவெண்ணி நகர்ப்புறங்களுக்குப்போய், B A. —B L. முதலிய A. B. C. D. பட்டங்களைப் பெற்று, வர்ணாச்சிரம தர்மங்கெட்டு, மூகக்ஷவரம், அர்த்த க்ஷவரம் முதலிய துஷ்கிருத்தியங்களைச் செய்வ ஹேதுவாக்கிக்கொள்ளவில்லையா? இவைகளெல்லாம் எந்த சாஸ்திரத்தில் இடங்கொடுத்தது ஆதலால்தான் தற்கால நிலைமைக்குத் தகுந்தபடி சாஸ்திரத்தைத் திருத்திக்கொள்ளவேண்டுமென்று ஏற்கனவேயே சொல்லியிருக்கிறேன். மேலும் தீண்டாமையை ஒழித்துவிடவேண்டியது அத்தியாவசியமான காரியமென்று வங்காளத்தில்கூடிய சாஸ்திரக்ஞர்களும், பண்டிதர்களும் தீர்மானித்து. அதன்படி தீண்டாதவர்களாகக் கருதப்பட்டிருந்தவர்களைக்கொண்டு தண்ணீர் கொண்டுவரும்படி செய்வித்து, அதனை எல்லாப் பண்டிதர்களும், சாஸ்திரக்ஞர்களும் சாப்பிட்டார்களென்றால் தீண்டாமையை ஒழித்துவிட்டு அவர்களுக்குச் சமசுதந்தரம் அளிக்கவேண்டியது அத்தியாவசியமானது என்பது நன்றாக விளங்கவில்லையா?

சாஸ்திரிகள்:—அவ்விதமாயின் திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள வைக்கம் என்ற ஊரில் மாத்திரம் ஏன் தீண்டாமை ஒழிக்கப்படவில்லை? வங்காளத்தில் தீண்டாமையை ஒழித்துவிட்டார்களென்றால் அது வடதேசத்தில் அவ்வளவு கட்டாயமில்லை. தென்தேசத்தில் அந்தப்படி அனுஷ்டிப்பது சாத்தியப்படாது. அதனால்தான் வைக்கத்தில் சத்தியாக்கிரஹம் நடத்தியும் சாத்தியப்படாமலிருக்கிறது.

தீக்ஷிதர்:—அவ்விடத்திலுள்ள பட்டர்கள், நம்பூத்ரிகள் நாயன்மார்கள் முதலானவர்களின் பிடிவாதபுத்தியால்தான் சத்தியாக்கிரஹம் செய்யும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதற்காகவே சுவாமி சிரத்தானந்த சன்யாசியும் வந்துகொண்டிருக்கின்றார். பண்டித மதனமோஹன் மாளவியா அவர்களும் வருவதாக வாக்களித்திருக்கின்றார். அவ்விடத்தில் சத்தியாக்கிரஹம் கட்டாயம் வெற்றி பெறும். அதைப்பற்றிச்சந்தேகம் வேண்டியதில்லை

சாஸ்திரிகள்:—அநிவித்யா டாரங்கதர்களாகவுள்ள பண்டிதர்களும், சாஸ்திரக்ஞர்களும், வித்வான்களும் ஒப்புக்கொண்டுவிட்டால் எனக்கு மாத்திரம்என்ன ஆக்ஷேபணையிருக்கிறது. எனக்கும் சம்மதந்தான். எல்லாவற்றிற்கும் பொறுத்திருந்து முடிவை கவனிப்போம். வந்தேமாதரம்.

---

"சுதந்திரன்."

ஆசிரியர்: வ. இராமஸ்வாமி அய்யங்கார்.

அரிய நடையில் காங்கிரஸ் கொள்கைகளை ஆ[illegible]ரித்து அநேக இனிமையான வியாசங்கள் அட[illegible]கியது.

வருஷ சந்தா ரூ 6.

மானேஜர், சுதந்திரன், தஞ்சாவூர்.

# ராணா பிரதாபசிம்மன்.

## அல்லது

## "ரஜபுத்திர தேசபக்தி."

(ஸ்ரீமான் மகாலிங்கசர்மா சிறைவாசத்தில் எழுதியது.)

(All Rights Reserved.)

(59-வது பக்கம் தொடர்ச்சி.)

நியாயமுறை தவறி அடித்ததற்காக வெட்கப்பட்டு, அதனால் மகா பரிசுத்தமான சூரியகுலத்துக்குப் பெருத்ததோர் அவமானம் ஏற்பட்டதாகக்கருதி, ஸ்ரீராமனை நோக்கி,

காரியன்ற களங்கமிறத் தொன்மை
வீரியன்ற மதிக்குளதா மெனச்
சூரியன் மரபுக்குமோர் தொன்மரு
ஆரியன் பிறந்தாக் கிளையாமரோ,

"வெகுகாலமாய்ச் சந்திரனிடத்தில் மாத்திரமே இருந்துகொண்டிருந்த களங்கம், இப்பொழுது ராமனாகிய நீ செய்த ஓர் அடாத செய்கையால் சூரியன் மரபுக்கும் ஏற்பட்டுவிட்டதே!" என்று மனம் பதைத்துக் கூறினானன்றே!

அவ்வாலி, இப்பொழுது உயிரோடு இருந்திருப்பின் நான் வீணாகத்தன் மயக்கபுத்தியால் ஒரு குலோத்தமனாகிய ஸ்ரீ ராமபிரானை அவ்வாறு கேட்டது முற்றிலும் பிசகென்றும், சூரிய குலத்துக்கு உண்மையில் ஏதாவது மறு ஏற்பட்டிருக்குமானால், அதற்கு ஆண்மையற்ற என் தந்தையும், அவன் வயிற்றில் தோன்றிய போர்முகம் அறியாத ஆண்மகனாய் விளங்கும் பாபியாகிய நானுமே காரணம் என்பதை நன்கு கண்டு எங்களை வாயாற தூஷித்திருப்பானன்றே?

என் குலத்திற்கு ஏற்பட்ட மறுவையும் எனது ஜாதியாருக்கு ஏற்பட்ட அவமானத்தையும், எனது தாய் திருநாட்டினுக்கு ஏற்பட்ட அடிமை விலங்கையும் அடியுடன் களைந்தெறிய யான் ஒருவனே தனித்து நிற்பேன். சுதந்திரத்தினுடைய பெருமையும் அது இல்லாமற் போகுமிடத்துக் கற்பகாலம் சோழிந்து நிற்கும் என்பதையும் நன்கு அறிந்துகொண்ட நான், இனி ஓர் கணமும் சும்மா இருப்பது எங்ஙனம்?

எந்த பாஷையிலும் சரி; சுதந்திரம் என்ற ஓர் [illegible]த மனிதனுடைய மனதைக் கவருவதுபோல் வேறு எவ்வார்த்தைகளும் கவருவதில்லை. உலக வாழ்க்கையிலும் சரி. தெய்வ வாழ்க்கையிலும் சரி, சுதந்தரம் என்ற ஓர் நோக்கமே மனிதனுடைய மனத்திற்கு ஊக்கமளித்து நிற்கின்றது. வாழ்நாளுக்கு இன்பமளித்து, உயிரொடு சேர்ந்து நிற்பதும் சுதந்திரமேயாகும். ஆகவே அச்சுதந்திரத்தை என் தாய்நாட்டின் க்ஷேமத்தின் பொருட்டு, சம்பாதிக்க எத்தனையோ தியாகங்களையும் செய்தேன். உலகத்தில் ஒவ்வொரு காலத்திலும் ஒரு மனிதர் தோன்றி தன்னுடைய அரிய சாமர்த்தியத்தினால், உலக சுதந்தரத்திற்கோ அல்லது வேறு பல உத்தமமான நோக்கங்களின் பொருட்டோ அரும்பாடுபட்டுத் தங்கள் பெயரை நிலைநாட்டிச் சென்றிருக்கின்றனர்.

ஒவ்வொரு நாட்டையும் தனித்தனியாக எடுத்துக்கொண்டு ஆராயுமிடத்து அந்தந்தநாடுகள் சுதந்திரமடைவதற்கு, ஓர் முக்கியமான முதல்வனாகிய, ஒரு புண்ணிய புருஷனுடைய அல்லது வீரபுருஷனுடைய பெயரைச் சுட்டிக்காட்டி நிற்கின்றன.

எனது அழகிய தாய்நாடாகிய மீவாரம் சுதந்திரமடைவதற்கு யானே ஏன் காரணமாக இருக்கக் கூடாது? இறைவனுடைய திருவருள் மாத்திரம் என்னிடம் நிறைந்து நிற்குமேயாகில் செய்தற்கரிய செயல்களையும், முடித்தற்கரிய கருமங்களையும், யான் ஒருவனே தமியனாய் நின்று, பெற்றுதல் இயல்பேயன்றோ? உண்மையான உறுதியுடன் உதவிவேண்டுவோர்க்கெல்லாம், உற்றவிடத்து வேண்டுவன வேண்டியவாறு அளிக்கும் வள்ளலன்றோ அப்பரமபிதா.

அன்று தன் சிற்றன்னையாகிய சுருசியினால், உதாசீனம் செய்யப்பட்ட ரோஷத்தினால் மன உறுதி கொண்டு சின்னஞ்சிறு குழந்தையும் 5 வயது பாலகனுமாகிய துருவன் நாடுவிட்டுக் காட்டையடைந்து தவம் இயற்றிய காலத்து, அவனுடைய உண்மையான அன்புக்கும், பரிசுத்தமான பக்திக்கும் வியந்து, சங்கு சக்கர

தராபாணியாய், வைகுண்டவாசனாகிய பகவான் பிரத்தியக்ஷமாகத் தோன்றி கிடைத்தற்கரிய காட்சியளித்து முடிவில் பேரின்ப நிலையாகிய சாம்ராஜ்யத்தையும் அளிக்கவில்லையோ?

மேலும் இராக்ஷதர் கோமானாகிய இராவணன் வயிற்றுதித்தும், செப்புதற்கரிய மெய்ப்பொருள் ஞானம் வாய்க்கப்பெற்று, உயிரையும் உடலையும் ஒருங்கே பொருட்படுத்தாது இன்னல் எவற்றிற்கும் அஞ்சானாகி வைரம்போல் மனதினிடத்துப் பதிந்த பக்தி என்னும் ஒரே ஆயுதத்தைத்தரித்து, அதன் மூலமாகக் கொடிய துன்பங்களைக் கடந்து கடையில் சர்வ பரிபூரண அகண்ட தத்துவமான பரம்பொருளைத் தன் கண்முன்னே பார்க்கும்படியான பெரும்பேறடைந்து, பெறுதற்கரிய மோக்ஷ வீட்டை எளிதில் அடைந்த என் இறைவனாகிய பிரகலாத ஆழ்வாரும் என்னை ஒத்த ஓர் சிறுவனேயன்றோ?

அவர்கள் பொருட்டு இன்னருள் சுரந்த எம்பெருமான், சுதந்திரமிழந்து கண்ணீர் பெருக்கும் என் அருமைத் தாய்நாட்டை, பகைவருடைய கொடிய ஆதிக்கத்தினின்றும் விடுவித்து நல்வாழ்வு கொடுக்க விரும்பும் எளியேனையும் கருணையுடன் கைதூக்கி விடுவானன்றோ! மேலும், கருணாநிதியாகிய ஜகன்மாதாவின் கோவிலுக்கும் இப்பொழுதே செல்லுகின்றேன். அன்னையுடைய திருச்சந்நிதானத்தில் சற்றுநேரம் இருந்து என் மனதை ஒருநிலைப்படுத்தி அவள் அருள் வேண்டி ஆராதனை செய்வேன். இரவு நடுநிசி ஆய்விட்டதுபோல் தோன்றுகிறது. ஆயினும் என்ன? நான் நினைத்ததைச் செய்து முடிக்கவேண்டியதே அவசியமாகும்; இதோ செல்லுகின்றேன்" என்று கூறிக்கொண்டே தன் இருப்பிடத்தை விட்டுப் புறப்பட்டு கால், கைகளைத் தண்ணீரில் கழுவிக்கொண்டு, இரண்டு கைகளிலும் நீரை அள்ளி, இரண்டு தடவை குடித்துவிட்டுக் காட்டு வழியாகச் சென்றான் காளிகோயிலை நாடி.

தன்னந்தனியே உட்கார்ந்து தேசத்தின்பொருட்டு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிக் காளிகோயிலுக்குப் புறப்பட்டுச் சென்ற அரசகுமாரன் யாரெனில் சித்தூரை நீக்கி உதயபுரத்தில் அரசு செய்ய ஆரம்பித்த ராணா உதயசிம்மனின் அரிய குமாரனும் முடிசூடிய மகுடதாரியனாகிய பிரதாபசிம்மனே யாகுமென்பதை நேயர்கள் அறிந்திருப்பார்கள்.

## இரண்டாவது அத்தியாயம்

இரவின் முற்பகுதி கழிந்து கன்னங்கரேலென்று எங்கும் ஒரே இருள்மயமாக இருந்தது. தேவியின் கோவிலுக்குச் செல்வதாக இருந்தால் ஆரணியத்தைத் தாண்டி அப்பால் செல்லவேண்டும். நல்ல காற்றுக் கூட அப்பொழுது அடிக்கவில்லை. மரங்களெல்லாம் சிறிதும் அசையாது நின்ற நிலையிலேயே இருந்தன. ஓரடியும் முன்னே எடுத்து வைக்கமுடியாதபடி அவ்வளவு கும்மிருட்டாய் இருந்தது. காட்டின் ஓர் பக்கத்தில் சிறியதோர் அருவி சலசலவென்ற சப்தத்துடன் பாய்ந்துகொண்டிருந்தது. மரங்கள் நெருங்கி அடர்ந்து வளர்ந்திருந்தன. அம்மரங்களினிடையே நீண்ட கொடிகள் அடுக்கடுக்காகப் படர்ந்து உட்செல்வோரை வழிமறிக்கும் வடங்கள்போல் பரந்து நின்றன. ஏராளமான பக்ஷிகளும், மிருகங்களும் பகற்காலத்தில் சஞ்சரித்துக் கொண்டிருப்பது வழக்கமேயாயினும் இப்பொழுது அவைகளின் சப்தம் சிறிதும் கேட்கவில்லை. இரவிலேயே வெளிப்பட்டு ஆகாரம் தேடும் வழக்கமுள்ள பிராணிகளும் அப்பொழுது தத்தம் இருப்பிடங்களை விட்டு வெளிவராது அடங்கிக் கிடந்தன. எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது.

ஆகாயத்தில் அப்பொழுதுதான் உதயமான சந்திரனும், தன்னுடைய கிரணங்களை அடவிக்குள் செலுத்த விரும்பினான். ஆனால் நெருங்கி வளர்ந்த மேகங்களுக்கிடையே அதிக வெளிச்சம் உள் நுழைய முடியவில்லை. நீண்ட கம்பிகளைப்போல சந்திர வெளிச்சம் அங்குமிங்கும் மரங்களில் ஊடுருவிப் பாய்ந்துகொண்டிருந்தது. திடீரென்று ஆகாயத்தில் கருமை நிறமுள்ள மேகக்கூட்டங்கள் ஒன்று சேர்ந்து குமுறிச் சந்திரனை மறைத்தன. இருள் அதிகரித்தது. வானத்தின் ஓர் பக்கத்தில் பளீர் பளீர் என்று மின்னல்கள் தோன்றின. வெகு கோரமாக இடிகள் இடித்தன. மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. சடசடவென்று ஓயாமல் ஒருமணிநேரம் மழை பொழிந்தது. பிறகு ஒருவாறு நிற்கத்தொடங்கியது. மங்கலான வெளிச்சம் ஏற்பட்டது. ஆனால் காட்டில் முன்னைப்போலவே நிசப்தம் மறுபடியும் குடிகொண்டது. எங்கும் கோரமாகவும் பயங்கரமாகவும் இருந்தது. எதிரிலுள்ள மரங்களை மனிதனென்றும் மரமென்றும் வித்தியாசம் கண்டுபிடிப்பதும் முடியாததாயிற்று.

(92 வது பக்கம் பார்க்க)

# பாங்குகளின் முறையும், அவைகளின் உபயோகமும்.

(ஒரு பாங்க் காஷியர் எழுதியது.)

(52-ம் பக்கத் தொடர்ச்சி.)

*நிர்ணயத்தவணை டிபாஸிட்டுகள்:*—(Fixed deposits) இவ்வித டிபாஸிட்டுகள் மொத்தத்தொகைகளுக்கு ஒரு வருஷமோ அல்லது இரண்டு வருஷமோ இம்மாதிரி நிர்ணய காலம் வரையில் பாங்கிலேயே போடப்படும். மற்ற டிபாஸிட்டுகளைவிட இவ்வகை டிபாஸிட்டுகளுக்கு அதிக வட்டி பாங்கர்கள் கொடுப்பார்கள். ஏனெனில் இம்மாதிரிப் போடப்படும் தொகைகள் நிர்ணயித்த காலம் வரை பாங்கிலேயே இருக்கிறபடியாலும் அதைத் திருப்பிக் கொடுக்கும் காலம் இன்னதென்று பாங்கர்களுக்குத் தெரிகிறபடியாலும் அவைகளுக்குப் பாங்கர்கள் தாங்கள் கொடுக்கும் வட்டியைவிட அதிக வட்டி வெளியில் கொடுத்து அப்படி அதிகமாய் வரும் வட்டியை தனக்கு லாபமாய் அடைய ஹேது இருக்கிறபடியாலும், மற்ற டிபாஸிட்டுகளை விட இந்த டிபாஸிட்டுகளுக்கு அதிகவட்டி பாங்கர்கள் கொடுப்பார்கள். பெருத்த முதலாளிகள் தங்கள் பணங்களை இம்மாதிரி கணக்கில் போட்டு ஆறு மாதத்திற்கொரு முறையோ அல்லது ஒரு வருஷத்திற்கொருமுறையோ, பாங்கியில் ஏற்பட்ட விதிப்படி வட்டியை வாங்கிக்கொண்டு தங்கள் செலவுக்கு வைத்துக்கொள்ளுவார்கள். பாங்கியில் இல்லாமல் சில்லரைப் பெயர்வழிகளிடத்தில் வெண்ணிலைக் கடனாகவோ அல்லது பெத்தகக் கடனாகவோ ஓர் முதலாளி கொடுக்கும்பக்ஷத்தில் வருஷாந்தர வட்டி ஒழுங்காய் வராது. முதல் தொகை இன்ன காலத்தில் திரும்பி வருமென்ற நிர்ணயம் இராமல் கஷ்டப்படும்படியாக இருக்கும். சில இடங்களில் முதலுக்கே மோசம் வந்துசேரும். பாங்கிகளில் போடும் டிபாஸிட்டுகளைப்பற்றி போட்டவர்களுக்கு ஒரு விதக் கவலையுமில்லை. வட்டியும் சரியான காலங்களில் தவறாது வந்துவிடும். வட்டியைக்கொண்டு ஜீவனம் செய்யலாமென்று இருப்பவர்களுக்கு குறிப்பிட்ட காலங்களில் வட்டி வாராமல் போகுமோவென்ற பயம் ஒருபோதும் இருக்காது. பெருத்த முதலாளிகளுக்குத் தங்கள் முதலைக் கவலையன்னியில் சமாதான குறைந்த வட்டிக்குப் போட பாங்க் மேற்கூறியபடி ஒத்தாசையாயிருக்கிறது.

*சேவிங்ஸ்பாங்க் டிபாஸிட்டுகள்:*—(Savings [redacted]nk deposits.) போஸ்டாபீசுகளில் சேவிங்ஸ் பாங்க் டிபாஸிட்டுகள் ஜனங்களிடம் வாங்கிக்கொண்டிருப்பது அனேகமாய் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அம்மாதிரியான டிபாஸிட்டுகள் பாங்கிகளிலும் வாங்குவார்கள். இம்மாதிரி டிபாஸிட்டுகள் நான் சொல்ப வரும்படியுள்ளவர்களுக்கு வருங்காலத்தில் ஓர் முதலைச் சேர்ப்பதற்கு அனுகுணமாகவிருக்கிறது. ஒரு ரூபாய் முதற்கொண்டு தங்களாலியன்றமட்டும் அப்போதைக்கப்போது எவ்வளவு தனது சொல்ப வட்டியிலிருந்து செலுத்தக் கூடுமோ அவ்வளவு இந்த சேவிங்ஸ் பாங்கு டிபாஸிட்டில் கட்டலாம். "பல துளி பெருவெள்ளம் என்றபடி சிறுகச்சிறுக செலுத்தி ஒரு முதல் சேர்ப்பதற்கு இவ்வித டிபாஸிட்டுகள் ஏழைஜனங்களுக்கு உபயோகப்படுவது போல் வேறு ஒரு இடத்திலும் இராது. இப்படிச் சிறுகச் சிறுகப்போட்ட தொகைகளை ஏதாவது செலவுக்கு மத்தியில் வாங்கிக்கொள்ளவேண்டுமானால் வாங்கிக்கொள்ளலாம். பணம் ஒரு மொத்தத்தொகையாகச் சேர்வதுடன் அப்பணத்திற்கு சொற்பவட்டியும் பாங்கர்கள் கொடுப்பார்கள்.

சில பாங்குகளில் உண்டிப்பெட்டி செய்து பணம் போடுகிறவர்களிடம் கொடுத்து அவர்கள் சௌகரியம் போல் வீட்டிலேயே பணம்போட்டு ஒரு வாரத்திற்கொரு முறையோ அல்லது 15 நாட்களுக்கொரு முறையோ பாங்கியில் கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பணம் போடுபவர்களிடம் ஒரு கச்சாத்து புஸ்தகமும் கொடுப்பார்கள். பணம் சேர்ந்தவுடன் பாங்கில் ஏற்பட்ட விதிப்படி இந்தப் பெட்டியைப் பாங்கில் கொண்டுவந்து கொடுப்பார்கள். இந்தப் பெட்டியைத் திறக்க பாங்கர்களுக்குமாத்திரம் தான் அதிகாரம் இருக்கும். டிபாஸிட்டரிடம் கொடுக்கும்போது பெட்டியை சீல் வைத்துத்தான் பாங்கர்கள் கொடுப்பார்கள். பெட்டியை பாங்கில் கொண்டு கொடுத்தவுடன் அவர்கள் அதைத்திறந்து சேர்ந்திருக்கும் தொகையை எடுத்துக்கொண்டு எவ்வளவு தொகை இருந்ததோ அத்தொகையை டிபாஸிட்டர் கணக்கில் வரவு வைத்துக்கொண்டு அவருக்குக் கொடுத்திருக்கும் கச்சாத்துப் புஸ்தகத்திலும் வரவு வைத்துக்கொடுப்பார்கள். உண்டிப் பெட்டியையும் சீல்வைத்து டிபாஸிட்டரிடம் மீண்டும் கொடுத்துவிடுவார்கள். இம்மாதிரியான டிபாஸிட்டுகள் சொற்ப வரும்படி புள்ளவர்களுக்கும் கூலிவேலை செய்பவர்

ளுக்கும் ஒரு முதல் சேர்ப்பதற்கு மேற்கூறியவாறு அநுகுணமாயிருக்கின்றது.

கடைமுதல் கணக்குகள்:-(Current deposits) முதலாளிகளிடத்திலும், வியாபாரிகளிடத்திலும் அவர்கள் சௌகரியத்தின்படி அடிக்கடி பணம் போட்டுக் கொண்டும், அவர்களுக்கு வேண்டியபோது செக் மூலமாய் பணம் வாங்கிக் கொள்ளும்படியாக இருக்கும் கடைமுதல் கணக்குகள் வைத்துக் கொண்டிருக்கும் ஸ்தாபனங்களுக்குத்தான் பாங்கு என்று சொல்லப்படும் என்று முன்னமேயே சொல்லி யிருக்கிறோம். இம்மாதிரியுள்ள கடைமுதல் கணக்குகள் தான் பெருத்தமுதலாளிகளுக்கும் வியாபாரிகளுக்கும் பல வழிகளிலும் சௌகரியமாகவிருக்கிறது. இதற்குப் பத்துவரவு கணக்கு என்று கூறுவார்கள். இந்தக் கணக்கில் ஒருவர் எவ்வளவு தொகையாயினும் பல தடவையாகவோ அல்லது ஒரே தடவையாகவோ, மொத்தமாகவோ அல்லது சில்லரையாகவோ எப்போது தான் திருப்பி வாங்கிக் கொள்வது என்ற நிபந்தனையில்லாமல் போடலாம். இந்தக் கணக்குக்கு தர்மார்த்தமாக மிக்க குறைவான வட்டி பாங்கர்கள் கொடுப்பார்கள். சில பாங்கர்கள் இம்மாதிரிக் கணக்குகளுக்கு வட்டியே கொடுக்கமாட்டார்கள். நவீன நாகரீகம் அதிகரித்த இங்கிலாந்து அமெரிக்கா முதலிய நாடுகளிலுள்ள சில பாங்கர்கள் இம்மாதிரியான கணக்குகளுக்கு வட்டி ஒன்றும் கொடாமலிருப்பதுந்தவிர இந்தக் கணக்குகள் ஜனங்களுக்காகத் தாங்கள் வைத்துக்கொண்டு அதற்காகத் தாங்கள் எடுத்துக்கொண்டுக்கும் சிரமத்திற்காக சொல்ப தரகும் (Commission) வாங்குகிறார்கள். அப்படித் தரகு கொடுத்தபோதிலும் பாங்கியில் கடைமுதல் கணக்குகள் வைத்துக்கொள்ளுவதில் முதலாளிகளுக்கும் வியாபாரிகளுக்கும் அநேக விதத்தில் சௌகரியமாக விருக்கின்றது.

செக்குகள்:—(Cheques) கடைமுதல் கணக்குகளில் போட்ட தொகைகளை எந்த நிமிஷத்தில் தேவையானாலும் திருப்பி வாங்கிக்கொள்ளலாமென்று சொன்னோம். அப்படி வாங்கிக்கொள்ளுவதானால் செக் மூலியமாய் வாங்கிக் கொள்ளலாமென்றும் சொன்னோம். செக் என்றால் என்னவென்றும் அவைகள் எவ்வகைப்படும் என்றும் இங்கு கூறுவோம். சாதாரணமாக நாம் பிறருக்குக் கொடுக்கும் தொகைகளுக்கு ரசீதுகள் வாங்கிக்கொள்ளுகிறோமல்லவா, துரைத்தனத்தார் விதித்திருக்கும் சட்டப்படி ரூ. 20க்கு மேற்பட்ட தொகைகளுக்கு ஒரு அணா ரசீது லேபிள் ஒட்டிக்கையெழுத்து செய்யவேண்டுமென்றும் அநேகருக்குத் தெரிந்த விஷயம். அதே மாதிரித்தான் பாங்குகளிலும் செய்வார்கள். ஆனால் கடைமுதல் கணக்குகளில் வாங்கும் தொகைகள் பாங்கர்களால் டிபாஸிட்டர்களுக்குக் கொடுக்கும் செக்குகளில் தான் வாங்கவேண்டிய தொகைகளை எழுதிக் கையொப்பம் செய்து கொடுத்துப் பணம் வாங்க வேண்டும். செக்குகள் இம்மாதிரித்தான் இருக்க வேண்டுமென்றும் அவைகள் இன்னின்ன வகைப்படுமென்றும் துரைத்தனத்தாராலேயே சட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு செக் பாரத்திற்கும் ஒரு அணா ஸ்டாம்பு பதித்திருக்கும். இந்த ஸ்டாம்பு கிரயம் மட்டிலும்தான் பாங்கர்கள் டிபாஸிட்டர்களிடமிருந்து வாங்கிக் கொள்ளுவார்கள்., மற்றபடி டிபாஸிட்டர்களுடைய உபயோகத்திற்காகக் கொடுக்கும் செக் புத்தகங்களுக்குக் கிரயம் வாங்குகிறதில்லை. செக் என்பது பாங்கருக்கு டிபாஸிட்டர், இன்னாருக்காவது அல்லது செக்கைக் கொண்டுவந்து கொடுக்கிறவர்களுக்காவது, அல்லது இன்னாருக்காவது அல்லது அவர் உத்தரவு பெற்றவர்களுக்காவது இத்தனை ரூபாய் கேட்டவுடன் கொடு என்று செய்யும் உத்தரவு. இந்தப் பிரகாரம் பாங்குக்கு அனுப்பப்படும் செக்குகளுக்கு அப்போதைக்கப்போது பாங்கில் செக்கு கொண்டுபோய் காட்டியவுடன் பாங்கர்கள் செக்கில் கண்ட தொகையைச் செக்கு கொண்டு வந்தவர் வசம் கொடுக்கக் கட்டுப்பட்டவர்கள்.

(தொடரும்.)

---

(90-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய பயங்கரமான காட்டில் அக்ரேகிரியில் ஓர் இடத்தில் மனிதனுடைய காலடிச் சத்தம் மாத்திரம் மெதுவாகக் கேட்டுக்கொண்டிருந்தது. ஆம், ஓர் மனிதன் மெதுவாகத்தனியாக அக்காட்டின் வழியே தள்ளாடித் தள்ளாடிச்சென்றுகொண்டிருந்தான். கூரிய முட்களால் நிரம்பப்பெற்ற புதர்களும் செடிகளும் அவனுடைய அழகிய சரீரத்தைக் குத்தியும் கீறியும் பல காயங்களை ஏற்படுத்தி அக்காயங்களிலிருந்து ரத்தம் கசிந்து வழிந்துகொண்டிருந்தது. சற்றுமுன்பு பெய்த மழையினால் அவனுடைய உடைகள் முற்றிலும் நனைந்துபோய் ஜலம் சொட்டிக்கொண்டிருந்தது. ஈரமான வஸ்திரங்களால் மூடப்பட்ட அவன் சரீரம் பனியாலும், குளிராலும் வெடவெடவென நடுங்கிக்கொண்டிருந்தது. அவனுடைய நீண்ட தலை மயிரும் மழையில்

(தொடரும்.)

## காயாரோகண வைத்தியசாலை, கும்பகோணம்.

**டாக்டர் V. P. சாமி அவர்களால் மிக்க திறமையுடன் நடத்தப் பெறுவது**

சித்தர்களுடைய உயர்ந்த வைத்திய முறைகளைப் பின்பற்றி பல நூற்றுக்கணக்காகக் கையாளப் படும் சிறந்த சுதேச வைத்தியசாலை. ஆராய்ச்சியும் அநுபவமும் கீர்த்தியும் வாய்ந்த அரியதோர் வைத்திய குடும்பத்தினரால் சிறப்புடன் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. ஏழைகளுக்குத் தருமவைத்தியம் செய்யப்படும். மாதந்தோறும் ஆயிரக்கணக்கானவர்கள் பிணி நீங்கி, வயிரா வாழ்த்திச்செல்கின்றனர். மலபந்தம், அஜீரணம், ஜுரம், காசம் முதலிய நோய்களுக்கும்; குஷ்டம், குன்மம் முதலிய மகாரோகங்களுக்கும் ஆச்சரியப்படும்படி மிக்க சுலபமாகச் சிகித்சை செய்து நிவர்த்திக்கப்படும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் கட்டி, காமாலை முதலிய கொடிய வியாதிகளை நிவர்த்தி செய்வதில் நமது வைத்தியசாலை அழியாப்புகழ் பெற்றிருக்கின்றது. ஏழைகளுடையவும், பிணியாளிகளுடையவும் நன்மையையே கருதி நடத்தப்படும் உயர்ந்த சுதேச வைத்திய ஸ்தாபனம் இதுவே. விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர், காயாரோகண வைத்தியசாலை,
காமாக்ஷி ஜோசியர் தெரு, கும்பகோணம்.



கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல்
பிரதம ஸமஸ்கிருத பண்டிதர்
ஆர். சிவராம சாஸ்திரிகளால்
பிரகரிக்கப்பட்ட

## ஸமஸ்கிருத புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ ராமசரிதம் (ஸமஸ்கிருத வசனம்) | 0 | 7 | 0 |
| சாகுந்தலா சரிதம் டிை | 0 | 4 | 0 |
| சாருதத்த சரிதம் டிை கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் மகா-ா-ஸ்ரீ சுவாமிநாதய்யர் அவர்களுடைய முன்னுரையுடன் கூடியது | 0 | 7 | 0 |
| சந்திர ரத்னாவளி | 0 | 10 | 0 |
| ஸ்ரீ மகல்பவல்லி (முதல் பாகம்) | 1 | 8 | 0 |
| சுக்ல யஜுர்வேதம் | 4 | 0 | 0 |
| ஸ்ரீமத் பாகவதத் தமிழ் வசனம் | 12 | 0 | 0 |
| [illegible]ல்பவல்லி (2-வது பாகம்) டிம்மி 2 பாரம் [illegible]காண்டனஞ்சிகையாக மாதந்தோறும் வெளிவரும். வருஷ சந்தா | 2 | 0 | 0 |

பண்டிட் ஆர். சிவராம சாஸ்திரி,
தலைமை ஸமஸ்கிருத பண்டிதர்,
டவுன் ஹைஸ்கூல் கும்பகோணம்.



## "தமிழர் போதினி"

யாழ்ப்பாணத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் அரிய பத்திரிகை.

இராஜீய, தேசிய விஷயங்கள் நன்றாய் எழுதப் பெறுவன. சுயராஜ்ய தாகமுடையோர் இதனை அவசியம் வாசிக்கவேண்டும். அடுத்த வருடம் மாதமிரு முறை வெளிவரும்.

வருடச்சந்தா ரூ. **5—0—0.**
தமிழர் போதினி ஆபீஸ்,
யாழ்ப்பாணம்,
(இலங்கை.)



## ஸ்ரீ மஹாபாரதச் சுருக்கம்.

(ஆதிபர்வம்.)

வேதாந்த தீபிகை [illegible]ற்ற பர்வங்களைவிட ஆதி பர்வத்தில் கிளைக்கதைகள் [illegible]ம். பாண்டவர்களின் சரித்ராரம்பத்துக்கு உபோத்காதமாகவே அநேக அத்யாயங்களிருக்கின்றன. இவற்றையெல்லாம் சுருக்கி ஒழுங்காக ஒன்று சேர்த்துக்கொண்டு வருவதில் ஐயரவர்கள் திறமை காட்டியிருக்கிறார்.

இதன் விலை அணா 12. தபாற்செலவு வேறு.

மானேஜர் :
சமஸ்கிருத பாடசாலை,
சேங்காலிபுரம், (தஞ்சை ஜில்லா.)

மொத்தமாகவும் வாங்கலாம். 12 காபிகள் வி. பி. சார்ஜுடன் ரூ. 8—0—0. 6 காபிகள் வி. பி. சார்ஜுடன் ரூ. 4—4—0.

நம் சகோதரர்களே! வியாபாரிகளே!
விளம்பரம்செய்வோர்களே!

# திராவிடன்

நம் தமிழ் நாட்டார்
முன்னேற்றத்திற்காகவே
வெளிவந்துலாவும்
தினசரிப் பத்திரிகை.

அரசர்முதல் சாமானிய விவசாயிவரை, செல்வவான் முதல் ஏழைவரை, சாதி, வகுப்பு பேதமின்றி யாவரும் வாசித்து வருவது நம் பத்திரிகையையே.

தமிழ்நாடு முழுவதும், தமிழ் நாட்டார் குடியேறியிருக்கும் வெளிநாடுகள்தோறும் பரவி வருகிறது.

விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்கிப் பணம் சம்பாதிக்க ஏற்ற பத்திரிகை இதுவே.

மானேஜர்:—
திராவிடன்,
போஸ்டு பாக்ஸ் நெ. 760,
எழும்பூர், மதருஸ்.

## "தெய்வ பக்தன்."

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தமிழ் நாட்டில் தேவஸ்தானம் முதலிய தர்ம ஸ்தாபனங்கள் இவற்றுல் நம்மவர் அடையவேண்டிய நன்மைகளையும் அவற்றில் அவர்களுக்குள்ள சம்பந்தங்களையும், பிற அறிவு வளர்ச்சிக்கும், செல்வ விருத்திக்கும் உற்ற செய்திகளைப்பற்றி பல அறிவாளிகள் எழுதிய வியாசங்கள் இதில் வெளிவரும். ஒவ்வொரு மதாபிமானி, தேசாபிமானிகளிடத்திலும் தவறுதிருக்கவேண்டிய ஒரு சிறந்த பத்திரிகையாகும்.

வருஷ சந்தா ரூ. 3.

மானேஜர், தெய்வபக்தன், கும்பகோணம்.

## "சந்திரா" பற்பொடி.

இந்த 'சந்திரா' பற்பொடியின் குணம் பல்வலி, பல் அசைதல், ஈர் கரைதல், பல்கூசுதல் முதலிய சகலதந்தரோகங்களையும் நிவர்த்திசெய்து பல்லைக் கெட்டிப்படுத்துவதில் நிகரற்றது. அநேக டாக்டர்களாலும் கனதனவான்களாலும் நற்சாக்ஷிப் பத்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் குணம் ஒரு முறை வாங்கி அனுபவித்தால் தெரியும். ஒரு பலம் டப்பி 1க்கு விலை அணா 3. டஜன் 1க்கு விலை ரூ 2 வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும். மிகுந்த உயர்ந்த முறையில் சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்டிருக்கிறது.

எல். ராமச்சந்திர ஐயர்,
நீலகண்ட கதர் ஸ்டோர்,
பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

## ஸ்ரீ பாலானந்த பற்பொடி.

இது பல்வலி, பல் ஆடுதல், இரத்தம் வடிதல் பல் கூச்சம், பல் சொத்தை இவைகள் சௌக்கியமாகும். தவிர நீர் குத்தல், நீர் எரிச்சல், வெட்டை புண், வயறுகடுப்பு, இரத்தக் கடுப்பு, மூலக்கடுப்பு இவைகளுக்கு ஆட்டுப்பால் அல்லது எருமைத்தயிரில் மேற்படி பற்பொடியைக் கலந்து சாப்பிட்டால் ஒரே வேளையில் அனுகூலப்படுத்தும்.

மூன்று மாதம் உபயோகப் படுத்தக்கூடிய டப்பி 1-க்கு விலை அணா 4.

அஷ்டசல்ம
ஸர்வரோக நிவாரண யௌவனலேகியம்

குல்மம் முதலான சகல ரோகங்களையும் கண்டித்து சரீரத்தை பெலப்படுத்தி ஆரோக்கியத்தையும் சுகத்தையும் கொடுக்கக்கூடியது. பத்தியமில்லை. இதன் விலை சேர் 1-க்கு ரூ. 4.

நேத்ரானந்த தைலம்.

கண் எரிச்சல், கண்புகைச்சல், கண்மறைவு, மண்டைக்குத்தல், சொரிசிரங்கு இவைகள் சௌக்கியமாகும். கிரயம் சேர் 1-க்கு ரூ. 2.

குறிப்பு:—காசரோகம், குஷ்டம் முதலிய வியாதிகள் நிவர்த்தியாகும் அருமையான மருந்துகள் கிடைக்கும். ஏழைகளுக்குத் தர்ம வைத்தியம். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

V. பாலு அண்டு ஸன்ஸ்,
எலந்துறை, திருவிடமருதூர் போஸ்டு.

ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன் உண்டு.

## தத்துவ போதினி.

ஓர் சிறந்த மாதப் பத்திரிகை.

யாவராலும் புகழப்பெறுவது. எங்கும் விரும்பப்பெறுவது. இப்பொழுது ஸ்ரீமத் வால்மீகி இராமாயணமும், இராஜமாணிக்கம், நீலாங்கனை என்ற துப்பறியும் நாவல்களும், திருக்குறளுரையும், சிவபுரி க்ஷேத்திரத்தின் மகிமையும், தத்துவவிஷயங்களும் எழுதப்படுகின்றது. ஸ்திரீகள் சிறுவர்களைக் குறித்த புத்திமதிகள், நல்லுரைகள், வர்ணாச்ரம தர்மத்தைக்குறித்த முக்கியமான விஷயங்களும் தக்க பெரியோர்களால் எழுதப்படுகின்றது. இவைகளுக்காக சில பக்கங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்தியா, பர்மா, சிலோனுக்குச் சந்தா ரூ. 1—0—0. (வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0)

3000 பத்திரிகைகளுக்குமேல் அச்சிடப் படுவதால் விளம்பரம் செய்வதற்குத் தகுதியானது. விளம்பர விகிதமும் குறைக்கப்பட்டிருக்கிறது.

தத்துவபோதினி ஆபீஸ்.
328, தங்கசாலைத்தெரு, சென்னை.

## தேசிய ராஜீய சரித்திர நூல்கள்.

ஸ்ரீமான் எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர் எழுதியவை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ரஜபுத்திர வீரர் சரித்திரம் | 1 | 4 | 0 |
| 2. | ஆரிய சரித்திரம் | 1 | 0 | 0 |
| 3. | மகாத்மா காந்தி சரிதம் | 0 | 8 | 0 |
| 4. | ஒத்துழையாமை சரித்திரம் | 0 | 4 | 0 |
| 5. | இந்தியாவும் சுய ஆட்சியும் | 1 | 8 | 0 |
| 6. | ஐசுவரிய சக்கரம் | 0 | 8 | 0 |
| 7. | திருக்குறள் நீதிக்கதைகள் | 0 | 6 | 0 |

இவையும் இன்னும் பல அரிய புத்தகங்களும் இடத்தில் கிடைக்கும்.

மயில் வாகன் கம்பெனி,
புத்தக வியாபாரிகள்,
ஐயப்ப செட்டித்தெரு, மண்ணடி, மதராஸ்.

## லோகமான்ய திலகர்.

பிறந்ததுமுதல் இறந்தது வரை முழு விவரத்துடன் ஸ்ரீயுத கிருஷ்ணசுவாமி சர்மா எழுதியது. குடும்பசரித்திரம், காந்த-திலகர் சம்வாதம், திலகர் ராஜீயக் கொள்கை, விசாரணைகள், நித்திய வாழ்க்கை முதலிய பலவிஷயங்கள் 16 அத்தியாயங்களில் காணலாம்.

300 பக்கங்கள் கொண்டது விலை ரூ. 1—8—0.

## தேசாபிமானத்தையூட்டும் நூல்கள்,

ஸ்ரீயுத கிருஷ்ணஸ்வாமி சர்மா இயற்றியவை.

| | | | |
|---|---|---|---|
| மகாத்மா காந்தியடிகள் | 1 | 8 | 0 |
| அலி சகோதரர்கள் | 1 | 0 | 0 |
| டால்ஸ்டாய் ருஷ்யஞானி | 0 | 4 | 0 |
| சிவாஜி மகாராஜா | 1 | 0 | 0 |
| இந்தியா இழந்த தனம் | 1 | 0 | 0 |
| இராஜரீக சாஸ்திரம் | 1 | 0 | 0 |
| இராஜராஜ சோழன் | 0 | 10 | 0 |
| அசோக சக்கரவர்த்தி | 0 | 8 | 0 |
| நெபோலியன் 1 8 0 பண்டிதநேரு | 0 | 2 | 0 |
| கும்பமகாராணு 0 6 0 ஆத்மசக்தி | 0 | 10 | 0 |

மானேஜர், கிராமானுகூலன், கும்பகோணம்.

தாதுபுஷ்டிக்குச் சிறந்த
ராஜவீரிய யுனானி
## மகாவித்துவாதி லேகியம்.

30 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டப்பி ரூ. 3.

பிரதிதினம் காலை மாலை சாப்பிட்டுவர நல்ல பசியைக்கொடுத்து, மலத்தை சுகமாய்க்கழித்து, இரத்தவிர்த்திசெய்து, நரம்புகளுக்கு முறுக்கேற்றி, ராஜக்கருவிகள்பலப்பட்டு தேகதிடம், தேஜஸ், முகவசீகரம், மனோற்சாகம் முதலியவை ஏற்பட்டு, சந்தானவிர்த்தியை யளிக்கும். சுருக்கச்சொல்லின் இழந்துபோன பலம் முழுவதும் திருப்பிக்கொடுக்கும். வேண்டுபவர் கியாட்லாக் கிற்கு எழுதவும்.

ஐ. ஷேக்ஹூஸைன் சாகிப்,
நேடிவ் யுனானி டாக்டர்,
ஆயுர்வேடிக் யுனானி மெடிகல் ஹால்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

# A. N. காதர் அவுலியா, பரிமளசாலை,

## வலங்கைமான் (தஞ்சை ஜில்லா.)

A. N. காதர் அவுலியா,

## பரிமள சந்தனாதித்தைலம்.

2¼ சேர் டப்பி 1-க்கு விலை ரூபா 2—0—0
1 சேர் ௸ ௸ 1—0—0

( வெளியுபயோகமட்டும் )

இம்மேலான பரிமள சந்தனாதித்தைலத்தில சோடச புஷ்பங்களாலும், 9-வித பச்சிலை மூலிகைகளாலும், பசும்பால் செவ்விழநீருடன் எங்கள் அனுபோகமுறைப் படி மிகப்பிரயாசையுடன் தயார் செய்திருக்கிறபடியால் 5-வயது பாலர் முதல் முதியவர்வரையில் ஆண் பெண் சகலபேர்களும் ஸ்நானஞ்செய்துவர தீரும் வியாதிகளாவன:— உஷ்ணம், கபாலக்கொதிப்பு, கண்ணெரிச்சல், கண்மறைப்பு, கண்குத்தல், கண்புகைச்சல், கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிகளும், தலைவலி, ஒத்தத் தலைவலி, மண்டைக்குடைச்சல், பீனிசம், மயக்கம், கிறுகிறுப்பு, கரப்பான் தினவு, சொரி, தேகஎரிச்சல் கற்றாழைநாற்றம் வேர்வை, தலைவழுக்கை, அஸ்திசுரம், வயிற்றுவலி, புண் புரைகள், சாவரகஷி, பித்தம் இவைகளை வேருடன் நீக்குவதுமன்னியில் மூளைக்கொதிப்பினால் சேரிட்டிருக்கும் தலைமயிர் செம்மட்டை, நரைமயிர், அடிக்கடி மயிர் உதிர்தல், பொடுகு, பேன், பிசின் உடைதல் இவைகள் யாவையுங்கண்டிப்பதுடன் தேகமேனியையும், முக வசிகரத்தையும் உண்டுசெய்து மனோவுற்சாகத்தைக் கொடுப்பதுடன், சுகந்தம் தேகத்தைவிட்டு மாராமல் இருக்கும் (உபயோக விபரம்) அதிகாலையில் அல்லது அவரவர்களுக்கு சாவகாசமான வேளையில் சீயக்காயுடன் ஸ்நானம் செய்யவேண்டும். பத்தியம்:— ஸ்நானம் செய்துகொண்ட தினத்திலும், அன்று இரவில் தயிர், மோர், ஸ்திரீசம்போகம் இவைகளைமட்டும் அவசியம் நீக்கவேண்டும். வெந்நீரிலும், சுத்தஜலத்திலும் ஸ்நானம் செய்யலாம், இத்தைலத்தின் நல்லகுணத்தை ஆண்டவன் உதவியால் உடனே காணலாம்.

2¼ சேர் டப்பி 6-க்கு விலை ரூபா. 10—8—0
1 சேர் டப்பி 6-க்கு ,, 5—8—0

வி. பி. தபால்செலவு பிரத்தியேகம்.

குறிப்பு:— 1 சேர் என்பது 24 ரூபா எடை, 2¼ சேர் என்பது 54 ரூபா எடை.

A. N. காதர் அவுலியா,

## பரிமள கூந்தல் தைலம்

2 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை அணா 0—12—0

( வெளியுபயோகமட்டும். )

மஹா உயர்ந்த பரிமள கூந்தல்தைலத்தில் பலவித வாசனை புஷ்பங்களினாலும், புனுகு, ஜவ்வாது உயர்ந்த நறுமண சரக்குகளுடன் சிரசைப்பற்றிய வியாதிகளைக் கண்டிக்கக்கூடிய மூலிகை சத்துக்களாலும், கூந்தலை நாளுக்குநாள் நாகப்பழம்போன்ற மேனியாக வளரக் கூடியதாயும் அனுபோகமுறைப்படி செய்திருக்கிறபடியால், பாலர்முதல் ஆண் பெண் சகலபேர்களும் தலைவாரி சிவிக்கட்டிக்கொள்ளும் சமயங்களிலும் அல்லது கொஞ்சமெடுத்து உச்சியில்வைத்துத் தேய்த்து மயிரைக் கோதிக்கட்டிக்கொண்டுவர மூளைக்கொதிப்பு, கண்ணெரிச்சல், உள்ளங்கால் எரிச்சல், நீரெரிச்சல் கண்ணில் பீளை சார்தல், அடிக்கடி மயிர் உதிர்தல் வெடித்தல், செம்மட்டை, வழுக்கை, கண்விழுதல், பொடுகு, பேன் சிக்கு அடைதல், முகப்பரு, முகக்கருமை, இவைகளை நாளுக்குநாள் அகற்றிக்கொண்டே வருவதுடன் பரிமளம் கூந்தலைவிட்டு ஒருவாரம்வரையில் விலகாமல் பக்கத்திலுள்ளவர்களைப் பரிமளிக்கச்செய்யும்

6 புட்டி விலை ரூபா. 4—1—0

வி. பி. தபால்செலவு பிரத்தியேகம்.

A. N. காதர் அவுலியா,

## பரிமள கஸ்தூரி தந்தப்பவுடர்.

டப்பி 1-க்கு விலை அணா 0—4—0

இச்சிறந்த பரிமளதந்தப்பவுடரை அனேகவிதமான பட்டைகளாலும், தந்தத்திற்கு ஆபுன்பரியந்தம் யாதொரு கெடுதிகளையும் உண்டுசெய்யாதபடி பாதுகாக்கக் கூடியதாயுள்ள விலையுயர்ந்த சரக்குகளாலும் கஸ்தூரி பற்பத்துடன் பரிமள வாசனையாய் அரும்பிரயாசையுடன் தயார்செய்திருக்கிறபடியால், பிரதிதினமும்பல் துலக்கிவர பல்சோய், பல்ஆட்டம், ஈறு வீக்கம், ஈறு கரைந்து இரத்தம்வடிதல், தந்தவாய்வு, பல்லில் சொத்தைவிழுதல், வாய்கசப்பு, அடிக்கடி பித்த உபரியால் வாயில் நீர் ஊரல் வாய்அழற்சி, பல் அரணை, வாய்வேக்காடு, பல்கூச்சம், வாய் ரணம், கடைவாய் வேகுதல் வாய் நாற்றம் இவைகளை 2, 3 வேளையில் ஆண்டவன் உதவியால் நிவர்த்திசெய்து பற்களை சங்கைப்போல் வெண்ணிறமாக்கும். கண்டத்திற்கு மேலுள்ள பித்த நீரை இறக்கி முகம் மேனியை உண்டுசெய்து கொண்டேவரும். 1 டப்பி 3 மாதம் வரையில் பல் துலக்கலாம், 6 டப்பி விலை ரூபா. 1—5—0

வி. பி. தபால்செலவு பிரத்தியேகம்